# சின்னஞ் சிறிய பூக்கள் - 3



# சின்னஞ்சிறிய பூக்கள் - 3

தொகுப்பு
உதவி.நண்பர்கள்

வெளியீட்டு உதவி

www.uthawi.net

வெளியீடு - 04

***Title:***
SINNANSSIRIYA POOKKAL - 3

***Language:***
Tamil

***First Edition:***
SEP 2013

***Edited By:***
uthawi.friends

***Published By:***
uthawi.net

***Printed By:***
Crescendoo Link
Colombo.

நூலின் பெயர்
சின்னஞ்சிறிய பூக்கள் - 3

மொழி
தமிழ்

தொகுப்பு
உதவி.நண்பர்கள்

முதல் பதிப்பு
புரட்டாதி 2013

வெளியீட்டு உதவி
உதவி. நெற்

அச்சகம்:
கிரசன்டோ லிங்
கொழும்பு.



*பிள்ளைகளின் தோட்டத்தில் சின்னஞ்சிறிய பூக்களுக்காய்...*

த. மேகராசா
அரசடித்தீவு, மட்டக்களப்பு.

அ. கருணாகரன்
அரசடித்தீவு, மட்டக்களப்பு.

மு. கருணாகரன்
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்

எண்ட பெயர் வி.லிலக்ஸன். நான் முதலாம் தரத்தில படிக்கிறன். நான் 39ம் கிராமத்தில இருந்து கதை சொல்லி நிகழ்ச்சிக்கு வாறனான். எங்கட அண்ணா வீட்ட அம்மாட்ட வந்து சொல்லுற, கதைசொல்லலில நிறைய பாட்டுக்கள், கதைகள், நாடகம் எல்லாம் செய்யுறதாம். அதை கேட்க எனக்கும் இங்கு வரோணும் போல இருந்தது. அப்ப அம்மாட்ட கேட்டன். போகச் சொன்னா. நான் வந்தன். எனக்கு நல்ல சந்தோசமாக இருக்கு. எனக்கு கத சொல்லுறது நல்லா பிடிக்கும். நானும் கதை சொல்லுவன். பாட்டுப் பாடுவன். நல்லா படிப்பன். எனக்கு படிச்சு இஞ்சினியர் ஆகணும் எண்டு விருப்பம். எங்கட அப்பா, அம்மாட்ட இங்க சொல்லித்தாறதை போய் சொல்லுற நான். எங்கட வகுப்பில கொஞ்சப் பேருதான் இங்க வாறவங்க. எங்கட ரீச்சர் சொல்லுறவ எல்லாரும் போகணும் என்று.

வி. லிலக்ஸன்
வயது - 6
மட்/மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

எனக்கு கதை சொல்லல் என்ற ரொம்ப பிடிக்கும். நான் எட்டாம் ஆண்டு படிக்கும் போதும் இக்கதை கூறலில் கலந்து கொண்டுள்ளேன். சனி, ஞாயிறு எண்டாலே எனக்கு சந்தோசம்தான் காரணம் கதை சொல்லிகள் வருவார்கள் நிறைய கதைகளை கூறுவர்கள், பாட்டு, ஆட்டம் என்று ஒரே கொண்டாட்டந்தான். இதுமட்டுமல்ல கதை, கவிதை எல்லாம் எழுதப் பழக்குவார்கள். எனக்கு கவிதை என்றால் நன்றாகப் பிடிக்கும் நான் இப்ப கவிதை, பாட்டு, கட்டுரைகள் எல்லாம் எழுதுவன்.

எங்கட அப்பா, அண்ணா எல்லாரும் குடும்ப கஸ்டத்தால வெளிநாட்டில் உழைத்துக் கொண்டிருக்கிறாங்க. இப்படியான கஸ்டத்தில் எனக்கு கவலை வரும் போதெல்லாம் கதைசொல்லல் நிகழ்ச்சிய யோசிச்சுப் பார்ப்பன் அதில கூறின கருத்துக்கள் மற்ற சிறார்கள் என்னையும் விட கடுமையாக கஸ்டப்பட்டு கொண்டு இருப்பதையெல்லாம் நினைத்துப் பார்ப்பேன். என்னுடைய அம்மா, அண்ணாக்களின் ஆசை போல் நான் நன்றாகப் படிக்கின்றேன்.

உயர்தர வகுப்பு படிக்கிற மற்ற அண்ணாமார், அக்காமாரோட இப்போது விவாத அரங்குகளில் போட்டியிட்டு வாறம். இதுவும் எனக்கு மிகவும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது.

சதிசனா
வயது - 14
மட்/மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை


# மது

மது மயக்கம் தரும்
அறிவைக் கெடுத்து
மாயை தரும்.

மது அருந்துவோரால்
பிள்ளைகளின் படிப்பும் பாழ்.
குடும்பத்தின் நிம்மதியும் தூள்

காசைக் கொடுத்து
கள்வெறி கொண்டு
அழிந்து போகிறார்.

சொத்தை விற்று
உறவைப் பகைத்து
கடைசியில் சுடு காட்டில்.





க.பிரகாசினி
வயது - 16
மட்/கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்


# பரிசு (குறும்படம்)

பரிசு எனும்படத்தில் அச்சிறுமி சைக்கிள் வாங்குவதற்காக, தன் தாயிடம் "சொக்லட் வாங்குவதற்கு பணம் தா அம்மா" என்று வாங்கி பணத்தைச் சேமித்து வைத்திருக்கின்றாள். ஒருநாள் தொலைக்காட்சியில் செய்தி பார்த்தபோது சூறாவழியால் பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு உதவி செய்யுமாறு கேட்கின்றனர். இதைப் பார்த்த சிறுமி தான் சேமித்த பணத்தைக் கொண்டு போய் அவர்களிடம் கொடுக்கின்றாள்.

இவ்வாறும் எமது கிராமத்திலும் சிறுவர்கள் பணம் சேகரிப்பது உண்டு. ஆனால் தாய், தந்தையர் பிள்ளைகள் சேகரித்த பணத்தை எடுத்து செலவுசெய்கின்றார்கள். குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில்லை. இப் படத்தில் சிறுமி கெஞ்சிக் கேட்டபின் தன்னுடைய மகளின் ஆசைக்காக தந்தை மதுபானப் பழக்கத்தை விட்டுவிடுகின்றார். இப்படி எத்தனை தாய், தந்தையர் தம் பிள்ளைகளின் ஆசைக்காக விட்டுக் கொடுக்கின்றார்கள்?




அ. நித்தியகலா
வயது- 15
மட்/நாற்பதுவட்டை விபுலாநந்தா வித்தியாலயம்



J. அருள்குமார்

# நான் எதிர்பார்க்கும் மலையகம்

மலையக மாணவர்கள் தரம் 8 வரை படித்துவிட்டு ஏதோ கடையைத் தேடிச்சென்று கூலிவேலை செய்கின்றார்கள். இலங்கை தலைநகரில் பார்த்தால் எமது மலையக இளைஞர்கள் அடிமை வேலை செய்வதை நன்கு அவதானிக்கலாம். நான் எதிர்பார்க்கும் மலையகம் இதுவல்ல. மலையக மாணவர்களும் படித்து பல்கலைக்கழகம் சென்று எமது மக்களினது கலை, கலாசாரம், பண்பாடு, கல்வி, அரசியல் இவையெல்லாவற்றையும் கட்டியெழுப்பி மலையகத்தை ஒரு சிறப்பு வாய்ந்ததாக அமைக்க பாடுபடவேண்டும்.

பலர் மலையக மக்களை தாழ்த்தியும், இரக்கப்பட்டும் பேசுவதை அவதானித்துள்ளேன். மலையக மக்கள் மட்டும் மனிதர்கள் இல்லையா? எம்மால் ஏன் சாதிக்கமுடியாது? நான் எதிர்பார்க்கும் மலையகத்தை நமது முயற்சியால் உருவாக்க முடியாதா?......... நான் எதிர்பார்க்கும் மலையகம் எனக்கு கிடைக்காதோ? இரக்கப்படுபவர்களாக நாம் தொடர்ந்தும் இருப்பது நல்லதல்ல.

எம். தர்சிகா
வயது - 14
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.



# நூறு ரூபாய் ஒன்றின் சுயசரிதை

நான் இன்று வங்கியில் கிழிந்த பழைய நூறு ரூபாய்க் கட்டுக்குள் அடங்குகின்றேன். இங்குவரும் முன்னர் பல தரப்பட்ட மனிதர்களிடம் அனுபவங்களைப் பெற்றிருக்கின்றேன். அவற்றை இப்போது மீட்டுப் பார்க்கின்றேன்.

நான் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தேன். எனது உடலில் இலங்கையிலுள்ள அழகிய குருவியின் வனப்பை வரைந்திருந்தனர். சிலர் என்னை எப்போதும் தங்களுடன் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டனர்.

இலங்கை மத்திய வங்கிக்கு நான் வந்திறங்கிய போது இளமை எழில் பிரகாசிக்க, காண்பவர் கண்ணைக் கவரும் வகையில் அழகும், இளமையும். கொண்டு விளங்கினேன். ஒரு நாள் மத்திய வங்கியில் இருந்து வேறொரு வங்கிக்கு எனது சமூகத்துடன் பயணம் செய்தேன். வங்கி அதிகாரி எங்களை ஒரு பெட்டிக்குள் அடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.அங்கு மீண்டும் நாங்கள் பாதுகாப்புடன் இரும்புப் பெட்டி ஒன்றினுள் வைத்துப் பூட்டப் பட்டோம்.

சிலநாட்கள் பெட்டிக்குள்ளேயே அடங்கிக் கிடந்தேன். ஒருநாள் ஒரு பணக்காரன் வங்கிக்கு வந்தான் வயலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சம்பளம் வாங்குவதற்காக எங்களை அவன் வங்கியிலிருந்து வெளியே கொண்டு வந்தான்.. மோட்டார் காரில் மீண்டும் பயணம் செய்து வயலைச் சென்றடைந்தோம். அங்கு விவசாயிகள் பலர் வரிசையாக வந்து எங்களைப் பெற்றுக்கொண்டு சென்றனர். என்னையும், எனது சமூகத்தையும் பெற்றுக் கொண்ட விவசாயிகளிடம் மகிழ்சசிக்குப் பதிலாக துக்கமே தெரிந்தது. விவசாயி ஒருவர் என்னை வாங்கி மடித்து தனது பையினுள் வைத்துக் கொண்டார். தன்னுடன் என்னையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவர் என்னை எடுத்து தனது மனைவியிடம் கொடுத்தார். அவருடைய மனைவி எங்களை எடுத்து எண்ணினார். பிறகு என்னைத் என்னைத் தன்னுடன் வைத்துக் கொண்டார்.

ஒருநாள் விவசாயியின் மகன் பாடசாலை செல்வதற்குப் பணம் கேட்டான். அவர் என்னை எடுத்து மகனுக்குக் கொடுத்தார். என்னை நன்கு கசக்கி பையினுள் வைத்தான் அப்பையன்.பின்னர் என்னை ஒருகடையில் கொடுத்துவிட்டு சிலபொருட்களை வாங்கினான். அந்தகடைக்காரன் என்னை ஓரு பெட்டியினுள் அடைத்தான். அடுத்த நாள் கடைக்காரன் என்னைச் சந்தைக்கு எடுத்துச்

சென்றான். என்னை ஒரு வியாபாரியிடம் கொடுத்து அவனும் சிலபொருட்களை பெற்றுச்சென்றான். அவ் வியாபாரி என்னைச் சேமிப்பு வங்கியில் அவனுடைய பெயரில் வைப்புச் செய்தான்.

ஆனால் நீண்டநாட்கள் என்னால் வங்கியில் இருக்க முடியவில்லை.வியாபாரி ஒருவர் வங்கியிலிருந்து என்னையும் எனது சமூகத்தையும் பெற்றுச் சென்றார். என்ன கொடுமை மீண்டும் பழைய வாழ்க்கை ஆரம்பமாகியது. நான் கைமாறிக் கைமாறிக் கசங்கிப் போய்விட்டேன். என் மேனியில் இருந்த இலக்கங்களும் எழுத்துக்களும் உருத் தெரியாமல் மறைந்ததோடு நான் கிழிந்தும் போய்விட்டேன்.

என்னை ஒருவரும் விரும்புவதாக இல்லை. திரும்பித் திரும்பிப் பார்த்துச் செல்கிறார்கள். இந்தக் காசு வேண்டாம் என்கின்றார்கள். திரும்பவும் என்னை வைத்திருந்த வியாபாரி ஒருவன் வங்கியில் ஒப்படைத்துவிட்டான். நான் புழக்கத்தில் இருக்க முடியாதென ஒதுக்கப்பட்டுள்ளேன். மற்றைய நோட்டுக்களுடன் நானும் அடங்கிக்கிடக்கின்றேன். விரைவில் எங்களை மத்திய வங்கியில் ஒப்படைத்துவிடுவார்கள். அங்கு பாவனைக்குத் தகுதியற்ற நோட்டுக்களை எடுத்து எரித்து விடுவார்கள்.அதில் நானும் சேர்ந்து எரிந்து விடுவேனோ? என்று கலக்கமடைகின்றேன்.

என்னுடைய அனுபவத்தில் நான் தெரிந்து கொண்ட உண்மை ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். என்னைப் போன்ற நாணயத் தாள்களைப் பூட்டிவைப்பதில் எந்தப் பயனுமில்லை. நாம் எவ்வளவு காலம் வெளியில் சுற்றிக் கொண்டிருந்தோமோ அவ்வளவுக்கவ்வளவு பலருக்கும் பயன்பட்டோம்.

சோ. டிலோஜன்
வயது - 15,
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி.

# அன்னை

வான் மழைக்கும் மேலாய்
அன்பு மழை பொழிபவள் தாய்


மழையும் சில வேளை
பூமியை மறந்திடும்
அதனால் பூமிக்கு
வரட்சியும் வந்திடும்.

அன்னை எப்போதும்
அணைப்பாள் அன்பால்



தாய் அன்பில் நனைவதால்
என்றும் எமக்கு வளர்ச்சி

ம. வனுசா
வயது- 16
மட்/கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.



# மலையக மக்களின் வரலாறு

இப்பொழுதுதான் நாம் மலையக மக்களாக இருக்கின்றோம். ஆனால் 1860ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தென்னிந்திய தமிழர்களாக இருந்தோம். இக் காலகட்டத்தில் இலங்கையைப் பிரித்தானியர்கள் காலனித்துவப் படுத்திவைத்திருந்தனர். இக்காலப் பகுதியிலேயே இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளில் ஒன்றான தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. இப் பயிரின் மூலம் பெரும் இலாபத்தை எதிர்பார்த்த பிரித்தானியர் குறைந்த ஊதியத்திற்கு கூடிய ஊழியத்தை பெற்றுக் கொள்ள விரும்பினர். அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறே அப்பொழுது இந்தியாவும் அவர்களின் காலனித்துவத்துக்குட்பட்ட நாடாகவே இருந்தது.

1887ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னிந்திய தமிழர்களுள் சுமார் நான்கு–ஐந்து இலட்சத்துக்குட்பட்டோரை கடல் மார்க்க வழியாக முத்துலெச்சுமி என்ற கப்பலினூடாக தலை மன்னாருக்கு அழைத்து வந்தனர். அழைத்துவரப்பட்டவரகள் மன்னாரையும், மன்னார் காட்டின் வழியாக பல துன்பங்களை அனுபவித்து குருணாகலையையும் வந்தடைந்தனர். அதன் பிறகு குருணாகலையிலிருந்து கண்டிக்கு அழைத்துவரப்பட்டு பல சிரமங்களுக்கும், சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட அனைவருமே கண்டியை அடையவில்லை. இலட்சக்கணக்கான மக்கள் பல துன்பங்களுக்கும், நோய்களுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்ற வழியில் மாண்டு போனார்கள். அது மட்டுமல்லாது பிரித்தானியரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அழைத்து வரப்பட்ட எமது மக்கள் பலர் தேயிலைச் செடிகளுக்குள்ளேயே மாண்டுபோனார்கள்.

அன்று அடிமைகளாக இருந்த எம் மூதாதையரைப் போலவே இன்றும் நாம் அடிமைகளாகத்தான் இருக்கின்றோம் தேயிலைச் செடி களுக்கிடையில் மலையக மக்களாய்.

எம். துசாந்தினி
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# எனது ஊர்

இயற்கை அழகு கொஞ்சும்
ஊர் எங்கள் ஊர்

அடிமை வாழ்வில் துயரப்படும்
ஊர் எங்கள் ஊர்

தோட்டத் துரைகளை வணங்கும்
ஊர் எங்கள் ஊர்

அட்டைகள் மனித இரத்தம் குடிக்கும்
ஊர் எங்கள் ஊர்


இத்தனை துன்பமும் நீங்கிட படிக்கும்
ஊர் எங்கள் ஊர்

பா. லோகேஸ்வரி
வயது - 13
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# நாய்குட்டி

ஓர் ஊரில் ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வீதியால் சென்று கொண்டிருக்கும் வேளை ஒரு நாய் குட்டி அழுது கொண்டிருந்தது. அந்த சிறுவன் அந்த நாயினைப் பார்த்து "நாய் குட்டியே, ஏன் இங்கு அழுகிறாய்? உனக்கு எவரும் இல்லையா" என்று கேட்டான். அந்த நாய் "எனக்கு எவரும் இல்லை. எனது அம்மா என்னைப் பெற்றவுடன் வீட்டுக்காரரர் வந்து பார்த்து நான் பெண்ணாக இருந்தமையால் என்னைக் கூட்டிக் கொண்டு இவ்விடத்தில் விட்டு விட்டுச் சென்று விட்டார்" என்று சொன்னது. அதைக் கேட்ட அந்தச் சிறுவன் " நான் தனியாகத்தான் இருக்கிறேன். என்னோடு வருகின்றாயா?" என்று கேட்டான். அந்த நாய் சந்தோசத்துடன் சரி என்று சொல்லி அவனது தோளில் ஏறி அமர்ந்து சென்றது. அவன் அந்த நாய்க் குட்டியை அவனது வீட்டிற்கு கொண்டு சென்றான். சில காலம் கழிந்தபின்னர் ஓர் நாள் அவன் அந்த நாயுடன் நீர் எடுப்பதற்காகக் குளத்துக்குச் சென்றான். தெளிந்த நீரை எடுப்பதற்காக குளத்திற்குள் காலைக் கொஞ்சம் முன்னாடி வைத்தான்.உடனே அவன் சேற்றில் புதைந்து விழுந்து விட்டான். கூக்குரலிட்டான். அவனது சத்தம் வெளிவர வில்லை. உடனே பக்கத்தில் நின்ற நாய் ஊளையிட்டு, குரைத்தது. வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவர் உடனே ஓடி வந்து அந்தச் சிறுவனை காப்பாற்றினார். தெருவிலே கவனிப்பாரின்றிக் கிடந்த நாயை எடுத்து வளர்த்ததற்கு நன்றியாக என் உயிரைக் காப்பாற்றிவிட்டதே என்று அந்தச் சிறுவன் சந்தோசமடைந்தான்.

க. சிந்துஜா
வயது -13
மட்/கொல்லநுலை. விவேகானந்தா வித்தியாலயம்



# பிள்ளை மடுவம்

வெள்ளையர் காலத்தில் தேயிலைத் தோட்டத்துக்கு கொழுந்தெடுக்கச் செல்லும் பெண்கள் தமது கைக்குழந்தைகளை அருகில் உள்ள மரங்களில் துணித்தொட்டில்களைக் கட்டி அதில் உறங்கவிட்டுச் சென்றனர். குழந்தை அழும்போது வேலையின் இடையே வந்து குழந்தைக்கு பாலூட்டி அரவணைத்துச் செல்வர். இதனால் வேலை செய்யும் நேரம் குறைவடைகின்றது என நினைத்த தோட்ட நிர்வாகம் கொழுந்தெடுக்கச் செல்லும் தாய்மார் தமது பிள்ளைகளை விட்டுச் செல்வதற்காக தோட்டம் தோட்டமாய் பிள்ளை மடுவங்களை அமைத்தது.

பிள்ளைகளைப் பார்ப்பதற்கு ஆயா ஒருத்தர் இருப்பார். வசதிகள் குறைவாகக் காணப்படும். தற்போது முன்னர் இருந்ததை விடவும் பிள்ளைமடுவங்கள் வசதியாக்கப்பட்டுள்ளன. கட்டிடங்கள் அழகாக்கப் பட்டிருக்கும், பிள்ளைகள் விளையாட விளையாட்டுப்பொருட்கள் இருக்கும். ஆனால் ஒரு பிள்ளை வளர்வதற்கான ஆரோக்கியமான சூழல் உருவாக்கப்படவே இல்லை.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள சில தோட்டங்களைத் தவிர மலையகத்தில் உள்ள தோட்டங்கள் யாவற்றிலும் பிள்ளைமடுவம் அன்றுபோல் இன்றும் பிள்ளைகள் வளர்வதற்கு ஏற்றதாக இல்லை. எமது தோட்டத்திலுள்ள பிள்ளைமடுவத்தில் மின்சாரம், நீர் போன்ற வசதிகள் இல்லாத காரணத்தினால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. எங்கள் தோட்டத்தில் காணப்படும் பிள்ளை மடுவத்தில் துணிகளால் கட்டப்பட்ட இறுக்கமான தொட்டில்களில் இடப்படும் குழந்தைகள் முறையாக சுவாசிக்க முடியாமல் நெருக்கடியான சூழலிலேயே வளரும் நிர்ப்பந்தத்திற்கு உட்படுவதால் அவ்வாறான குழந்தைகளின் மன வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இறுக்கமான துணித் தொட்டில்களில் உறங்கும் குழந்தைகள் அப்படியே போடப்பட்டபடியே கிடக்கவேண்டிய நிலையுள்ளது. அவ்வாறே அக்குழந்தை விழித்தாலும் கூட இருளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை. உடலை அசைக்கக்கூட முடியாது. கை, கால்களை உதறி விளையாட முடியாத நிலை.

மலையக சிறுவர்கள் ஆரோக்கியமாக வளரவேண்டும் என்றால் அடிப்படை வசதிகள் ஒழுங்காக அமைய வேண்டும். ஆனால் ....?

தி. உதயனி
வயது - 14
கே/தெஹி/கந்தலோயா தமிழ்வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# சிறகுகள் உடைந்த மின்மினிப்பூச்சி

ஒளியை உடலில் காவிப் பறக்கும்
மின்மினியே நீ
இயற்கையின் அதிசயம்.

இரவில் பறக்கும்
விமானம் போன்று செல்லும் நீ
எம் கண்களுக்கு கொள்ளை அழகு.

உறவுகளோடு கூடி உல்லாசம் சென்று
சுதந்திரமாய் வாழ்ந்த நீ
இன்று
இரண்டு சிறகுகளையும் இழந்து
மின்னிமின்னிக்கிடக்கின்றாயே!

நீ சூழ்ந்திருந்த சுற்றமெங்கே?
உன் புன்னகை எங்கே?

உனது இந்நிலையைக் காண
மனம் கவலை கொள்கிறது..

சிறகுகள் உடைந்த எம் வாழ்வுபோல் உனக்கும் ஆயிற்றோ
உனது இந்நிலைக்கு யார் காரணமென்று சொல்வாயா?


ம. நேரு
வயது-16
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி

# நான் எதிர்பார்க்கும் எனது மலையக சமூகம்

"கையில் வெண்ணையிருக்க நெய் தேடி அலையும் வெளியரையும் காணோம்" இப் பழமொழியானது மலையக மக்களுக்கு மிகப் பொருத்தமானதாகும். ஏனெனில், திறமையான பல மாணவச் செல்வங்களை கொண்டுள்ள மலையகச் சமூகம் அவர்களை கல்வியின்பால் முன்னேற்றி நகராமல் எப்பொழுதும் ஏனையோரை நம்பி வாழ்கின்றார்கள். இவ்வாறு இல்லாமல் எனது மலையகம் கல்வியில் சுயமாக முன்னேற்றமடைந்து முன்செல்ல வேண்டுமென்பது எனது அவாவாகும். எங்கு சென்று பார்த்தாலும், கேட்டாலும் கூட மலையகம் என்றாலே தாழ்த்தப்பட்ட ஒரு சமூகம் என்பதே அனைவரினதும் வியாக்கியானமாகும்.

இன்றைய மலையகத்தில் கல்வி, பொருளாதார வசதிகளால் முன்னேறிய மிகச் சிலர் பெரிய பெரிய வீடுகளைக் கட்டித் தாம் மட்டும் ஒரு மாயை மனிதர்களாக வாழ விரும்புகிறார்களே தவிர மலையகத்தை தம்மால் இயன்றளவு முன்னகர்த்த வேண்டும் என்று கொஞ்சம்கூட நினைப்பதில்லை. இந்நிலை எனக்கு மிகவும் வருத்தமளிக்கின்றது. இதைவிடவும் தாமும் இதே தோட்டத்தில்தான் வாழ்ந்தோம் என்ற அடையாளத்தையும் அழிக்கின்றனர். இது மிகவும் கவலையான விடயமாகும். இவ்வாறில்லாமல் நாம் அனைவரும் படிப்பதோடு மலையகத்தின் கலைகளையும், அடையாளங்களையும், சுவடுகளையும் பாதுகாக்கவும் வேண்டும். அதுமட்டுமல்லாமல் எமது முன்னேற்றத்தை எட்டுவதற்கு அனைவரும் மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். கல்வியிலும் திறமையிலும் அறிவிலும் அறிவியலிலும் கலைகளிலும் விளையாட்டிலும் வீரத்திலும் மற்றும் சமூகச் சிந்தனையிலும் மலையகத்தை முன்னேற்ற சிந்திக்கும் மாணவர்களாக நாம் இருக்கவேண்டும். எதிர்காலத்தில் நாமே நம் சமூகத்தை முன்னகர்த்திட முயற்சி செய்திட வேண்டும். தூரதரிசனத்துடன் ஒரு அத்திவாரத்தை இடவேண்டும்.

ஆ. தயாகரன்
வயது- 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.



# ஆமை

ஆமை நல்ல ஆமை.

ஓடு கொண்ட ஆமை.

சின்னச் சின்ன காலால்

ஊர்ந்து செல்லும் ஆமை.

தன்னை பிடிக்க வந்தால்—தன்

ஓட்டில் மறையும் ஆமை.

விரைந்து ஓடும் முயலுடன்

போட்டி என்று வந்து

ஊர்ந்து வென்ற ஆமை

சி. கேதீஸ்
வயது -16
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி

# எனது பிரச்சினை

எனது வீடு கந்தலோயா பாடசாலையிலிருந்து சுமார் ஐந்து மைல் தொலைவில் இருக்கின்றது. எனது வீடு இருக்கும் இடத்தின் பெயர் சிபோத் ஆகும். நான் பாடசாலைக்கு நடந்துசெல்லும் பாதை மிகவும் கரடுமுரடாகவும், அபாயகரமானதாகவும் இருக்கின்றது. அந்த பாதையைச் செப்பனிடுவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை. இனிமேலும் பாதையை யாரேனும் செப்பனிடுவார்கள் என்ற நம்பிக்கையும் சுத்தமாக எனக்கு இல்லை.

அந்த பாதையை சீர்திருத்த யாரும் முன்வருவார்களாக இருந்தால் அது எனக்கும் எனது தோட்டத்து மக்களுக்கும் மறக்கமுடியாத விடயம்.

எம். ரொஷான்
வயது-13
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# Death on Fullmoon Day


(இலங்கைத் திரைப்படம்)

இந்தப் படத்தைப் பார்க்கும் போது எனக்கு சோகம் ஏற்பட்டது. அந்த முதியவருக்கு கண் தெரியாது இருந்தாலும் அவர் நிறைய வேலைகள் செய்கின்றார். குடத்தில் நீர் எடுத்துக் கொண்டு சாமியாக நினைத்து ஒரு அரசமரத்தின் வேரைக் கழுவுகின்றார். அவரது மகன் இராணுவப் படையிலிருந்து யுத்தத்திற்குச் செல்லும் போது யுத்தத்தில் இறந்து விட்டான். ஆனால் முதியவரைப் பொறுத்தவரை அவர் மகன் இறக்கவில்லை.அரசாங்கம் பொய் சொல்கின்றது என்றும் தனது மகன் வருவான் என்றும் நம்பிக்கையுடன் இருக்கின்றார். தன் மகனுக்காக ஆடையும் வாங்கி வைத்திருக்கிறார்.

இப்படத்தில் வரும் வயோதிபர் போன்றே எமது கிராமத்திலும், தங்கள் பிள்ளைகள் என்றாவது திரும்ப வருவார்கள் என்று பல பெற்றோர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இவர்களைப் பார்க்கும்போது அழுகை வரும்.



அ. நித்தியகலா,
வயது - 15
மட்/நாற்பதுவட்டை விவேகானந்தா வித்தியாலயம்


திவ்யா

# வறுமை

வறுமையாம் வறுமை–இவ்
உலகில் எப்போதும் வறுமை.

வறுமையால் உடம்பு வாடுகிறதே
பல குடும்பங்களும்
துன்பத்தில் உழல்கிறதே.

வறுமையால் படுக்கவும் இடமில்லை
தங்கி இருக்கவும் இடமில்லை

வறுமை தரும் பாதிப்பு
வாழ்வையே சிதைக்கும் பாதிப்பு.

செ. ரஜெந்திரன்,
வயது- 17
யோ. டிலோஜன்,
வயது- 15
சி. நிரோஜன்,
வயது - 17
மட்/சந்திவெளி மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்.

# பாட்டி

எனது அம்மா நான் இரண்டு வயது இருக்கும்போதே வெளிநாடு சென்றுவிட்டார். நான் பாட்டியிடம் தான் வளர்கின்றேன்.

பாட்டிக்கோ ஒருகால் இயலாது. அக் கஷ்ரத்திலும் என்னை வளர்ப்பதோடு படிக்கவும் வைக்கின்றார். வருடத்திற்கு ஒருதடவை அம்மா பணம் மட்டும் அனுப்புவார். பாட்டி இதைக்கொண்டு சமாளிக்க பெரும்பாடுபடுவார். சமாளிக்க இயலாமல் முதுமையிலும் தினமும் தேயிலை பறிப்பதுதான் பாட்டியின் வேலை. 15 கிலோ கொழுந்து இல்லையென்றால் எங்கள் வயிற்றுக்கு உணவு இல்லை.

நானும் பாட்டியும் மிகவும் கஷ்ரப்படுகின்றோம். ஆனால் எனது அம்மா என்னை பெற்றெடுத்தது மட்டுமே கடமை என்று நினைத்துக்கொண்டு எங்களை மறந்துவிட்டார். எனக்கும் நிறைய ஆசைகள் உண்டு. வெவ்வேறான உணவுகள், ஆடைகள் அணிவது தொடர்பான ஆசைகள் வந்துபோகும். ஆனால் நாங்கள் இருக்கும் நிலைமையில் இது எதுவும் இயலாது. தற்போது நான் க.பொ.த சாஃதர பரீட்சைக்கு படிக்கிறேன். நான் நிச்சயமாக பரீட்சையில் சித்தியெய்தி மேற்படிப்பு படித்து எனக்கு அம்மாவாக உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் எனது பாட்டியை கவனித்துக்கொள்வேன்.

S. வசந்தகுமாரி
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# எனது வாழ்க்கை

எனது பெற்றோர்கள் இருவருமே என்னுடன் இல்லை. எனது அப்பா 2012இல் இறந்துவிட்டார். என்னுடைய தாய் நான் சிறுவனாக இருக்கும்போதே வெளிநாடு சென்றுவிட்டார்.

எனக்கு உலகம் தெரிந்ததில் இருந்து என்னுடைய தாத்தா வீட்டில்தான் நான் வசிக்கிறேன். இக் குடும்பத்தில் சித்தா, சித்தி, தாத்தா பாட்டி இவர்கள் நால்வரிடமே எனது வாழ்க்கை இருந்து வருகிறது. நான் கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்யாலயத்தில் கல்வி கற்று வருகின்றேன். என்னை வேலைக்குச் செல்லும்படி சொல்லி வீட்டில் நிறைய துன்பங்களைக் கொடுத்தார்கள். என்னால் முடிந்தளவு அதையெல்லாம் சகித்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலையில் கொடுக்கும் வீட்டுவேலைகளைச் செய்வதற்குக் கூட அனுமதிக்கமாட்டார்கள். உண்மையில் எனக்கு படிப்பதற்கான ஒரு சூழல் இல்லவே இல்லை. இருந்தும் தொடர்ந்தும் இந்த சூழலில்தான் படிக்கிறேன். என்னுடைய தாத்தா என்னை தினந்தோறும் அவமானமாக பேசுவார்.

இதையெல்லாம் தாங்கமுடியாமல் ஒருமுறை கொழும்புக்கு வேலைக்குச் சென்றுவிட்டேன். அங்கு சென்று இதுவரை அனுபவித்ததற்கு மேலான துன்பங்களை அனுபவித்தேன். சில மாதங்களின் பிறகு தாத்தா வீட்டுக்கு திரும்ப வந்தேன். முதல்நாள் எல்லோரும் என்னுடன் அன்புடன் பழகினார்கள். இரண்டு, மூன்று நாட்களில் என்னிடம் கதைப்பதைக் குறைத்துக் கொண்டார்கள்.

நான் திரும்ப வந்திருப்பதை அறிந்த எனது பாடசாலை அதிபர் என்னை மீண்டும் பாடசாலைக்கு அழைத்தார். நான்பட்ட கஷ்ரத்தை உணர்ந்து திரும்பவும் பாடசாலைக்கு வந்தேன்.
இப்போது 11ம் தரத்தில் கல்வி கற்கிறேன்.

உரிய நேரத்தில் உரிய உதவி கிடைத்திருக்காவிட்டால் எனக்கு என்ன நடந்திருக்கும்?

லோ. கேசவன்
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# நம்பிக்கை

அதிகாலையில் உதிப்பேன் என்பது
ஆதவனது நம்பிக்கை

காற்றைப் பார்த்து பறப்பேன் என்பது
பட்டத்தின் நம்பிக்கை

பரீட்சையில் வெற்றி பெறுவேன் என்பது
மாணவரது நம்பிக்கை

சிறப்பாக கற்பிப்பேன் என்பது
ஆசிரியர் நம்பிக்கை

இன்று வெல்வேன் என்பது
வீரரின் நம்பிக்கை

சிறப்பாக ஓவியம் வரைவேன் என்பது
ஓவியரது நம்பிக்கை

உயர்வேன் என்று உறுதி கொள்வது
உழைப்பவர் நம்பிக்கை

தமிழ் மொழியே தாய் மொழி என்பது
தமிழர் நம்பிக்கை

நம்பிக்கையே வாழ்க்கை

த. சிந்துஜன்
வயது - 17
விபுலானந்தா சிறுவர் இல்லம்,
திருப்பழுகாமம்.

# Bicycle Thieves

(இத்தாலியத் திரைப்படம்)




இது ஒரு இத்தாலிய சினிமாவாகும். இப் படமானது போரின் பின்னான வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மக்களின் துன்பங்களைப் பற்றிப் பேசுகின்றது.

கதாநாயகன் தனது குடும்பத்தின் பட்டினியைப் போக்குவதற்காகச் சினிமா போஸ்டர் ஒட்டும் வேலை செய்கின்றான். வேலைக்கு அவசியமாகத் தேவைப்பட்டதால், மனைவியின் ஆபரணங்களை விற்று ஒரு சைக்கிளை வாங்குகிறான். வேலைக்குச் செல்லும் வழியில் தனது மகனைப் பாடசாலையில் இறக்கிவிட்டு, வேலை செய்யும் இடத்திற்கு சென்று வேலையை முடித்து, மீண்டும் தனது மகனை வீட்டிற்கு அழைத்துச்செல்வதை வழமையாக்கிக் கொள்கிறான்.


ஒரு நாள் சைக்கிளை அருகில் நிறுத்திவிட்டு சினிமா போஸ்டர்களை ஒட்டிக்கொண்டிருக்கும் போது திருடன் ஒருவன் அவனது சைக்கிளைத் திருடிக்கொண்டு செல்வதைக் கண்டு, அவனைத் துரத்திச் சென்று முயற்சி பயனளிக்காதவனாக விரக்தியடைகிறான். அங்கும் இங்கும் தேடிப்பார்த்தும் தனது சைக்கிளைக் கண்டுபிடிக்க முடியாது கவலையுடன் வீடு திரும்புகிறான். மகன் தனது தந்தையைக் கண்டு சைக்கிள் எங்கே என்று கேட்க அவன் பதிலேதும் கூறாமல் தனது மகனுடன் திரும்பவும் சைக்கிளைத் தேடுகின்றான். இதில் அவனும் மகனும் படும்

அவமானங்கள், துயரங்கள் அதிகம். இறுதியில் அவனே சைக்கிள் திருடனாக பொலிசாரால் கைது செய்யப்பபடும்போது வேதனையாக இருக்கிறது.

வறுமை ஒவ்வொரு மனிதரையும் எப்படியெல்லாம் செயற்பட வைக்கிறது என்பதைப் படம் முழுக்கக் காட்டுகிறார்கள். வறுமை, பட்டினி என்ற சூழ்நிலைகளினாலேயே திருடும் நிலைக்குத் தள்ளப்படுவதையும், திட்டமிட்டு குற்றவாளிகளாக அந்த மனிதர்கள் இல்லை என்பதையும் தெளிவாகக் காட்டுகிறார்கள்.

இவ்வாறு என் வாழ்க்கையில் ஒரு தமிழ்ப் படத்தைப் பார்க்க முடியாமல் போனதற்காக நான் கவலையடைகின்றேன்.


என். தர்ஷன்
வயது 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டி.



# நான் வாழும் மலையகம்

நான் மலையகத்தில் கந்தலோயா தோட்டத்தில் வசித்துவரும் ஒரு மாணவியாவேன். எங்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற பாடசாலை ஒன்று காணப்படுகின்றது. சுமார் நூற்று அறுபது மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலை ஒன்று தொடக்கம் பதினொன்று வரையான வகுப்புகளைக் கொண்டு காணப்பட்டபோதிலும் இரண்டு கட்டிடங்களையும், ஐந்து ஆசிரியர்களையும் மட்டுமே கொண்டு இயங்கி வருகின்றது. இடவசதி, மின்சார வசதி, மைதான வசதி இல்லாமை மிக சிரமமான ஒரு விடயமாக காணப்பட்ட போதிலும் கல்வியில் சிக்கல் ஏற்படுவதில்லை. மலையகத்தை சிறப்பிக்க கல்வியால் மாத்திரமே முடியும் என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்துள்ளோம். ஒவ்வொரு மாணவர் மனதிலும் மலையகம் பற்றி ஓர் எண்ணம் நிச்சயமாக காணப்படுகிறது. அதேபோல் என் மனதிலும் ஓர் எண்ணம் உண்டு. எம்போன்ற மாணவர்களால், சிறந்த கல்வியால் மலையகத்தை கட்டியெழுப்பலாம் என்பது எனது நம்பிக்கை. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் பெற்றோர்கள் வேலைக்குச் செல்வதைப் பார்த்து கண்ணீர் சிந்தினால் மாத்திரம் போதாது. அதற்கு தீர்வு காண்பதே எமது முதற் கடமையாகும். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மலையகத்தைக் கட்டியெழுப்புவோம்.

எம். சுகிர்ஜா
வயது- 14
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.


K. நீலன்

# வேண்டாம்

தனிமையான வாழ்க்கை வேண்டாம.
தவிக்கின்ற உணர்வு வேண்டாம்.

தலைவராக தீய
வழி தேட வேண்டாம்.

தாழ்வாக நடக்கவேண்டாம்.
பாசத்தைப் பறிக்கவேண்டாம்


தீய கூட்டங்கள் கூட வேண்டாம் – பின்னர்
கெட்டுப்போய் நிற்கவேண்டாம்

மறைந்து இருந்து தாக்கவேண்டாம்
பழிவாங்கும் எண்ணம் வேண்டாம்

பயப்படும் உள்ளம் வேண்டாம்.
படிப்பதை நிறுத்த வேண்டாம்

இருட்டறையில் வாழவேண்டாம்
இன்பங்களை இழக்கவேண்டாம்.

இ. குகேந்திரன்
வயது -15
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி


G. மரியதாஸ்

# CHILDREN OF HEAVEN

(ஈரானியத் திரைப்படம்)

இந்தப் படத்தில் வரும் சிறுவர்களின் குடும்பமானது மிகவும் கஸ்ரப்பட்ட குடும்பமாகும். அதில் அச் சிறுமி வீட்டு வேலையைச் செய்து விட்டுத்தான் பாடசாலைக்குச் செல்கின்றாள். அச் சிறுவனானவன் தனது தந்தையுடன் வெளிநகரத்துக்குச் சென்று வேலை தேடுகின்றான். சிறுவர்கள் இருவரும் ஒரு சோடி பாதணிகளை வைத்துக்கொண்டு மிகவும் கஸ்டத்தின் மத்தியிலே மாறி மாறி அணிந்துகொண்டு பாடசாலைக்கு செல்கின்றனர். தங்கை பாடசாலையால் வந்த பிறகே அவளுடைய பாதணியை அணிந்து செல்ல வேண்டியிருப்பதால் அச் சிறுவன் பாடசாலைக்குச் செல்ல நேரம் தாமதமா கின்றது. ஒருநாள் அச்சிறுவன் விளம்பரம் ஒன்றில் ஓட்டப் பந்தயம் நடக்க இருப்பதையும், இரண்டாவது பரிசாக பாதணி ஒரு சோடி கிடைக்கும் என்பதையும் அறிந்து கொள்கிறான். போட்டியில் கலந்து கொண்டு பெரும் சிரமங்கள் மத்தியில் வெற்றி அடைகின்றான். ஆனால் அவன் முதலாவதாக வந்ததால் தங்கப் பதக்கமும் சான்றிதழும் மட்டுமே வழங்கப்படுகின்றது. போட்டியின் போது இருந்த பாதணியும் கிழிந்துவிட்டது. போட்டியில் வெற்றி பெற்றாலும் பாதணி பரிசாக கிடைக்காததை நினைத்து கவலைப்படுகின்றான்.

இந்தச் சிறுவர்களின் வாழ்க்கையைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாகவும் மனதில் சஞ்சலமாகவும் இருந்ததது. அவனுடைய எதிர்பார்ப்பு தோல்வி அடைகின்றது.அவர்களுக்கு பாதணிகள் இருந்திருந்தால் பாடசாலைக்கு சென்று படித்திருப்பார்கள்.அவர்களின் கற்கும் ஆர்வம் வெளிப்படுகின்றது.

எவ்வளவு கஸ்டம் வந்தாலும் மனதைத் தளரவிடாமல் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது.



சி. யோகா
வயது - 15
மட்/நாற்பதுவட்டை விவேகானந்தா வித்தியாலயம்.

# அம்மா

நான் கந்தலோயா தோட்டத்தில் வசிக்கின்றேன். கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி கற்கிறேன். எனது குடும்பத்தில் 5 பேர். எனது அம்மா தோட்டத் தொழிலாளியாக இருக்கின்றார். எனது அப்பா எனக்கு சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். எனக்கு இரண்டு அண்ணன்மார்கள். பெரிய அண்ணன் நன்றாகப் படிப்பவர். அப்பா இறந்தவுடன் அம்மா கஷ்ரப்பட்டு எங்களைப் படிக்கவைத்தார். ஆனால் அண்ணன் படிக்காமல் வேலைக்குப் போய்விட்டார். ஒழுங்காக ஒரு இடத்தில் வேலை செய்யாமல் வீட்டிற்கு வந்துவிடுவார். சின்ன அண்ணன் நான் படிக்கும் பாடசாலையில் இப்போது தரம் பதினொன்றில் கல்வி கற்கின்றார். இவரும் நன்றாகப் படிப்பார். எங்களுக்கு யாருடைய உதவியும் இல்லை. எங்கள் அம்மா இருவரையும் கஷ்ரப்பட்டு படிக்கவைக்கின்றார். என் அம்மாவின் கஷ்ரத்திற்கு என்றாவது முடிவு உண்டு. எனது அம்மா கொழுந்து பறிக்கும் கைகளுக்கு என்றாவது நானும் எனது அண்ணனும் விடுதலை கொடுப்போம். எனது குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவோம்.



எஸ். சரணியா
வயது - 14
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய

# யுத்த வாழ்க்கை

பாடசாலைக்கு நாங்கள் போகையில்
பாதையில் பாதியில் குண்டுகள் வெடித்தன.

ஓடினோம் பாய்ந்துவிழுந்து
பறந்தன எங்கள் கால்கள்

தாயை இழந்தோம்
தந்தையைக் காணவில்லை.

ஓடினோம்.
நாங்கள் ஓடினோம்.


குடிக்க நீர் இல்லை
குளிக்க நீர் இல்லை
குந்தியிருக்க இடமில்லை
குழந்தை அழுகையில்
குடுக்கப் பாலுமில்லை
படிப்பு இல்லை
படுக்கையும் இல்லை.

தெருவில் நின்றோம்
கை ஏந்தினோம்

கண்ணீர் வழிகையில்
யார் கை துடைக்கும்?




பே. ஜெயக்காந்தன்
வயது - 15
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்.



# என் விருப்பம்

எனது குடும்பத்தில் நான், எனது அம்மா, அப்பா, சகோகோதரனுடன் நான்கு பேர் இருக்கின்றோம் . இதற்கு முன் நாங்கள் எதுராபொல என்ற தோட்டத்தில் வாழ்ந்து வந்தோம். அங்கு எனது தந்தை ஒவ்வொரு நாளும் கசிப்பு குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து எங்களோடு சண்டை போடுவார். இதனால் எனக்கு படிக்க முடியாது. நிம்மதியாக நித்திரை செய்ய முடியாது. இந்தமாதிரி தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தார். இதனால் என்னுடைய தாய் ஒரு முடிவுக்கு வந்தார். நானும் என்னுடைய பிள்ளைகளும் தனியாக இருக்கின்றோம் என்று கூறி கந்தலோயாத் தோட்டத்துக்கு எங்களை அழைத்து வந்தார். கந்தலோயாத் தோட்டத்தில் நாங்கள் மிகவும் சந்தோசமாக இருக்கின்றோம். இப்போது நான் ஓரளவு படிக்கின்றேன். அம்மாவின் துணிந்த முடிவு எங்கள் எல்லோரையும் சந்தோசமாக வாழ வைத்தது. நான் எப்படியாவது படித்து எனது தாய்க்கு மட்டுமல்லாது எனது ஏழை சமூகத்துக்கும் உதவ வேண்டும் என ஆசைப்படுகின்றேன்.

எஸ். ரசிக்குமார்
வயது - 15
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.


மழையில் நனையும் மாணவர் வீடு

# வேண்டாம்

ஏன் இந்த ஏமாற்றம்?
ஏன் இந்த கஷ்ரம்?

வஞ்சகர்களின் பேச்சை நம்பி
தொடந்தும் துன்பநிலை.

இனியும் இந்த வாழ்வு
வேண்டவே வேண்டாம்.

பாடு பட்டு உழைத்ததை
கஷ்ரமின்றி சுரண்ட
அனுமதிக்க வேண்டாம்.

தூரத்தில் வரும் அதிகாரிக்கு
கும்பிடு போட நாம்
அடிமைகள் இல்லை.

உழைத்து வாழும் உத்தமர்கள் நாங்கள்.
சுரண்டி வாழும் எத்தர்கள் அவர்கள்.

வேண்டும் அச்சம்
எங்களுக்கல்ல அவர்களுக்கே

பா. நிவேதா
வயது - 14
கே/தெஹி/கந்தலோயாதமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.



# குனிய வேண்டாம்

வந்து விட்டார்கள் – நம்
வாசலைத் தேடி
வாக்குகள் கேட்டு.

இந்திய வம்சாவழி என்பார்கள்!
தாமும் லயத்தில் வாழ்ந்தோம் என்பார்கள்!

இதற்குத்தான் ஏமாந்தனர்
எமது முன்னோர்கள்.
இனியும் இந்த ஏமாற்றம்
வேண்டவே வேண்டாம்.

தோட்டத் துரைமார்களைக்
கையெடுத்துக் கும்பிட வேண்டாம்.

மற்றவர்களுக்காய் குனிந்து
எமக்கு கூன் தான் மிச்சம்.

பிறக்கும் போது நாம்
அடிமையில்லை.
இடையில் வந்த
அடிமைத்தனம்
இனியும் வேண்டவே வேண்டாம்.

ர. கஜன்
வயது- 14
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# CHE (ஸ்பானியத் திரைப்படம்)

மனிதர் உலகத்தில் பிறந்து வாழ்வது குறுங்காலமே. அதன் பிறகு அவர் மறைந்து விடுவார். சில காலம் சென்றதும் அவ்வாறு ஒருவர் வாழ்ந்ததாக யாருக்கும் தெரியாமலே போய்விடும். இதுதான் நாம் வாழும் வாழ்க்கை முறை. இவ்வாறு மனிதர் தன் வாழ்க்கையை வாழும் சந்தர்ப்பத்தில், ஆஜன்டினா நாட்டில் CHE எனும் அபூர்வ மனிதர் பிறந்தார்.

அவர் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார் என்பதை CHE என்ற ஆவணப்படம் மூலம் அறிந்தேன். சேகுவராவின் சமூக, அரசியல் அர்ப்பணிப்பையும் அவரின் விடா முயற்சியையும் இப்படம் மூலம் அறியலாம். அவரைப் போன்று தூய்மையான உள்ளமும், நியாயமான கடுங் கோபமும் உருவான ஒருவர் மறுபடியும் இந்த பூமியில் பிறப்பார் என்பது சந்தேகமே. இவர் ஒரு வீரப் படையை உருவாக்கி நியாயத்திற்காய் குரல் கொடுத்து தான் பிறந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்குச் சென்று அநீதிக்கு எதிராகப் போராடியதை நினைக்கும் போது நாம் எப்படிப்பட்ட சுயநல வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்பது புலனாகிறது.

தனது சமூகதிற்காக வாழ்ந்து காட்டிய சேகுவராவினை எம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கின்றோம் என்பது கேள்விக்குறியே? இறுதியில் சேகுவராவின் மரணத்தை பார்க்கும் போது மனதிற்குள் ஏதேதோ செய்கின்றது.

ஆஜன்டினாவில் பிறந்து கியூபாவில் தனது புரட்சிகர செயற்பாடுகளில் இறங்கி அந்திமத்தில் பொலிவியாவில் உயிர் துறந்த அந்தப் போராளி என்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்பார். நீங்களும் CHE வின் வாழ்க்கை ஆவணப்படத்தை ஒரு முறை பாருங்கள்.




எம். பிரபாத்
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டி.

# நீர் வளம்

இயற்கைவளங்கள் மனிதருக்கு கிடைத்துள்ள அரும் பெரும் செல்வங்களாகும். இலங்கையில் நீர், நிலம், காடு, மலை, கனியம் முதலான இயற்கை வளங்கள் காணப்படுகின்றன.

அனைத்து உயிரினங்களின் வாழ்க்கைக்கும் மிகவும் முக்கியமான செல்வமாக நீர் விளங்குகின்றது. நீர் இல்லாவிட்டால் மனிதர் மட்டுமல்ல தாவரங்கள், விலங்குகள் எவையும் நிலைத்திருக்க முடியாது. உலகின் பெறுமதிமிக்க இயற்கை வளம் நீர் ஆகும். நீரை மாசடையாது சிக்கனமாக பாதுகாத்து பாவிக்க வேண்டும். நீர் எதிர் காலத்தில் குறையலாம் என்று விஞ்ஞாகூனிகள் கூறுகின்றார்கள். இப்படி இருக்கும் போது நீரை எதிர்காலத்தில் நம்முடைய சமுகத்திற்கு பயன்படும் வகையில் கவனமாகப் பாவிக்க வேண்டும்.

இயற்கை வளமாகிய நீர் அரும்பெரும் செல்வமாகும். சில நாடுகள் நீரை பணம் கொடுத்துவாங்குகிறார்கள். நமது நாட்டில் பலர் நீரின் பெறுமதியை தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். வெளிநாட்டில் நீரின் பெறுமதியைத் தெரிந்துகொண்டு சிக்கனமாகப் பாவித்துவருகின்றார்கள்.


உலகில் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான நீரை வியாபாரிகள் இப்போது தமது சொத்தாக்கி வருகின்றார்கள்.

புவியில் காணப்படும் நீர் திண்மம். திரவம், வாயு போன்ற பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. புவி மேற்பரப்பில் 71% நீரினால் சூழப்பட்டதாகும். இவற்றில் 97% சமுத்திரங்களாகும். நீர் பனிக்கட்டியாகி, உருகி, மனித பயன் பயன்பாட்டிற்கு உகந்ததாகக் காணப்படுகின்றது. இதனால்தான் உலகில் உள்ள இயற்கைவளங்களில் நீர் முதலிடம் பெறுகின்றது.

நீர் பெறும் வழிகளாக சமுத்திரம். குளங்கள். ஆறுகள். கடல்கள். கிணறுகள். என்று பல இடங்களைச் சொல்லிக்கொண்டேபோகலாம்.

இ. அருள்தாஸ்
வயது- 15
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்.
சந்திவெளி

M. சுரேஷ்


01
இன்றும் பரீட்சைக்கு
உரிய நாட்கள்
தினந்தோறும் படிக்காதவன்
இன்று படிக்கிறான்
தினந்தோறும் படிக்கிற
-வன் இன்று விளைய
-டுகிறான்

# தொல்லை [குறும்படம்]

சிறுவன் ஒருவன் தனது உயிருக்கு உயிராக இருந்த தனது ஒரே சொந்தமான தந்தையை இழந்து உணவுக்கு வழியின்றி வீதி ஓரத்தில் கிடந்த குழாய் ஒன்றில் நித்திரை செய்து கொண்டிருக்கும் போது தனது கடந்தகால வாழ்க்கையை கனவு கண்ட அதிர்ச்சியில் எழும்பினான். பின்பு அவன் வீதி ஓரத்தில் நடந்துகொண்டிருந்தான். அப்போது ஒருகடையில் ஒருவர் இறைவனுக்கு பிரசாதம் வைத்தார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனை அவர் துரத்திவிட்டார் அவன் பசியின் கொடுமையால் வீதியில் நடந்து கொண்டிருந்தான். ஒரு ஆலயத்தின் நீர் தடாகத்தில் சிலர் அவர்களின் பொழுதைக் கழிப்பதற்கு சோளம் பொரிகளை வாங்கி தடாகத்தில் உள்ள மீன்களுக்கு இரையாகக் கொடுத்தனர். அதனையும் அவன் பார்த்துக் கொண்டு பசியால் சென்றுகொண்டிருந்தான்.

இன்னோரிடத்தில் பிறந்தநாள் கேக்கை சாப்பிடுவதற்குப் பதிலாக முகத்தில் பூசி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதனைப் பார்க்க அவனுக்கு பசி இன்னமும் அதிகரித்தது. அவனைப் பார்த்த அவர்கள் ஒரு நாயை விரட்டுவது போல விரட்டினார்கள்.

அச்சிறுவன் வெறுத்துப் போய் கடற்கரைக்குச் சென்றான். அங்கே செல்லப் பிராணிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. தனது பெற்றோரின் இறப்பை முன்னிட்டு இறுதிக் கடன் செய்வதற்காக ஒருவர் கடற்கரையில் உணவு வைத்து பிராணிகளை மகிழ்வித்தார். அதனை பார்த்தக் கொண்டிருந்துவிட்டு அவன் தன்னுடைய பழைய இடத்திற்கு வந்து கொண்டிருந்தான்.

வரும் வழியில் ஒருவர் கடை முதலாளியிடம் தனது பணப் பையைக் காணவில்லை எனக் கூறிக் கொண்டிருந்தார்.அதனைக் கேட்ட அந்தச் சிறுவன் ஓடிப் போய் தனது குழாயினுள் இருந்த அவருடைய பணப்பையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

பின் கவலையுடன் திரும்பவும் கடற்கரைக்குச் சென்றான். கவலையுடன் அங்கும் இங்கும் உலாவித்திரிந்தான். அவன் நினைத்திருந்தால் அவருடைய பணத்தை எடுத்து தனது பசியைப் போக்கியிருக்கலாம் அவன் அப்படிச் செய்யவில்லை.

ஏழைகளைப் பார்த்தும் இரக்கம் வராதவர்களா இந்த மனிதர்கள்?

ச. சதீஸ்குமார்
வயது - 16
நாற்பதுவட்டை விபுலானந்தா.வித்தியாலயம்.

# நான் அதிபரானால்.....

நேரத்திற்கு பாடசாலை வருவேன். மாணவர்களையும் தினமும் பாடசாலை வரச் சொல்லுவேன். மாணவர்களுடன் அன்பாகப் பழகுவேன். மணவர்களுக்கு சரிசமமாக இருந்து படிக்க உதவி செய்வேன். மாணவர்களுக்கு தெரியாததை சொல்லிக்கொடுப்பேன். மாணவர்களை கண்டபடி ஏச மாட்டேன். மாணவர்கள் படிப்பதற்கு அவரது தாய், தந்தையருக்கு அறிவுரை கூறுவேன். பாடம் படித்து முடித்ததும் மாணவர்களிடம் கருத்துக்களைக் கேட்பேன். அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆதரவாக இருப்பேன். மாணவர்கள் ஒழுங்காகப் படிக்கின்றார்களா? என்று வகுப்புகளுக்குச் சென்று பார்த்துக் கொள்வேன்.

கே. லுக்ஷாணிபிரியா ர.தனுஷன்
வயது - 11
கே/தெஹ/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# வேண்டாம்

சோம்பேறியாய் இருக்கவேண்டாம்
சோகமாக படிக்கவேண்டாம்

சந்தோசமாய் இருக்கும் போது
துன்பத்தை நினைக்க வேண்டாம்

இளவயதில் திருமணத்தைத் திணிக்கவேண்டாம்
இனிமையான வாழ்வைக் கெடுக்கவேண்டாம்


அன்புள்ள அம்மாவுக்கு அடிக்க வேண்டாம்
அருமையான ஆசிரியரை மறக்க வேண்டாம்

பாடசாலைக்குப் போகும் காலத்தில்
வேலைக்கு அமர்த்த வேண்டாம்

படித்துக் கொண்டிருக்கும் வேளையில்
அடித்து எங்களைத் துன்புறுத்த வேண்டாம்.

அன்பு தேடி வந்தால் மறுக்க வேண்டாம்.
அறிவு கொண்ட பெரியோரை இழக்க வேண்டாம்.
ஊர் மக்களுக்கு தீங்கு விளைவிக்க வேண்டாம்.

சி. கேதீஸ்
வயது -16
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்.
சந்திவெளி


மரம்

# End of childhood

(ஈரானியத் திரைப்படம்)

இத் திரைப்படமானது யுத்தக்கொடுமையிலிருந்து தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றத்துடிக்கும் ஒரு குடும்பத் தலைவரின் மரணத்தின் பின் தந்தையின் செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்யும் ஒரு சிறுவனின் கதையைக் கூறுகிறது.


யுத்தத்தின் கொடுமை எவ்வாறானது என்பது நன்றாக விளங்குகின்றது. நாம் எப்போதும் மனத் தைரியத்தோடு இருக்க வேண்டும் என்பதையும், எப்போதுமே எமக்கு பாதுகாவலாக ஒருவர் இருக்க மாட்டார் என்பதையும், எப்போதாவது பிறருக்கு பாதுகாப்பளிக்கவேண்டிய நிலை நமக்கு ஏற்படுமென்பதையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அத்தோடு யுத்தத்தின் கொடுமைகளைக் காணும் போது எங்குமே, எதற்காகவுமே யுத்தம் வேண்டாமென மனம் விரும்புகின்றது.

எத்தனையோ தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்தும் ஏற்படாத சஞ்சலம் இத் திரைப்படத்தைப் பார்த்ததும் எனக்கு ஏற்பட்டது. யுத்தத்தின் கோரத்தாண்டவத்தை தாங்க முடியாமல் அச் சிறுவன் புத்தகத்தை எடுக்க வேண்டிய கையில் துப்பாக்கியையும், புத்தகப் பையை சுமக்க வேண்டிய வயதில் தன் குடும்பத்தையும் சுமந்து கொண்டு பட்ட துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவை. யுத்தமானது அப்பாவியான சிறுவர்களையும் கூட விட்டுவைப்பதில்லை. அவர்களையும் இக்கட்டான படுகுழியில் தள்ளுகிறது. சிறுவர்கள் ஆயுதம் தூக்குகிறார்கள் என்று சத்தம் போடுபவர்கள் எந்தச் சூழ்நிலையால் சிறுவர்கள் இந்த துயர நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை ஏன் கதைப்பதில்லை?

யுத்தம் இல்லாத உலகம் வேண்டும்.



ஆ. துசாந்தினி
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டி.


மலையகத்தின் தற்போதைய நிலைமை
ம.குஹாந்தினி
தரம்: 07
கே/சந்தி/கந்தபொல
தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய

# சிறுவர் தினம்

ஒக்டோபர் 1ம் திகதி சிறுவர் தினம் என ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்துள்ளது.அதனைத்தொடர்ந்து வருடா வருடம் உலகமெங்கும் சிறுவர்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனைக் கொண்டாடு வதிலும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் யுனிசெப் நிறுவனம் பங்காற்றி வருகின்றது. சிறுவர்கள் எனப்படுவோர் யார்? ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கத்திற்கான காரணங்கள் என்ன? ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட காலப்பின்னணி எவ்வாறானது? சிறுவர் உரிமைகள் எவை? என்றெல்லாம் பல கேள்விகள் எழுகின்றன

பதினெட்டு வயதிற்கு கீழ்ப்பட்டவர்களே சிறுவர் என ஐக்கிய நாடுகள் சபையால் வரையறுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது இரண்டாம் உலகமகா யுத்தத்தின் விளைவாக உருவான இலட்சக்கணக்கான அநாதரவான சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அத்தோடு ஐக்கிய நாடுகள் சபையானது 1946ம் ஆண்டு ஆரம்பமாகியது. இவ் அமைப்பானது சின்னஞ் சிறார்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடனே அமையப்பெற்றது சிறுவர்களுக்கென பல்வேறுபட்ட உரிமைகள் வகுக்கப்பட்டன. அதாவது பாடசாலைக்கு செல்லல், விரும்பியவாறு கல்வி பயிலல், நண்பர்களுடன் சேர்ந்து உரையாடல், தாயின் அன்பைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல உரிமைகள் வகுக்கப்பட்டன. இவ்வாறான உரிமைகள் வகுக்கப்பட்டமை மட்டுமன்றி அதற்கான உரிமை மீறல்கள் பற்றியும் யுனிசெப் நிறுவனம் கடுமையாக கண்டனம் தெரிவிக்கின்றது.

ஐக்கியநாடுகள் சபை, யுனிசெப் என்பன இருந்தும் இன்றும் கூட போர்களில் சிறுவர்கள் கொல்லப்படுகிறார்கள். சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள்.

எமது ஊர்களில் சிறுவர்களுக்கு என்ன நடக்கின்றது? சிறுவர்கள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதற்கு தூண்டுகோலாக அமைகின்ற காரணி மதுவாகும். அதுமட்டுமன்றி எமது ஊர்களில்

இப்போது அம்மாக்கள் வெளிநாட்டிற்குச் சென்றால், அப்பாவுடன் பிள்ளைகளை விட்டுச்செல்கின்றனர். அப்பா மது அருந்திவிட்டு பிள்ளைகளுக்கு அடித்தல், பிள்ளையை சாராயம் வாங்குவதற்கு அனுப்புதல், மது அருந்த காசி இல்லாத போது பிள்ளைகளை பணக்காரர்களின் வீட்டிற்கு வேலைக்கு அனுப்புதல், பெண் பிள்ளைகளுக்கு தகாத வார்த்தைகளால் ஏசுதல் போன்ற செயற்பாடு களால் வதைக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் இல்லாது, சிறுவர் சிறுமியருக்கான சிறந்த சூழல் அமைக்கப்பட வேண்டும்.

**சி. நிறோஜன்**
வயது - 17
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி.

# அம்மா



என்னை வளர்ப்பவளும் அம்மா

எனக்காய் வேலை செய்பவளும் அம்மா

என்னை கட்டி அணைப்பவளும் அம்மா

எனக்கு பால் தருபவளும் அம்மா

என்னை பள்ளிக்கு அனுபுவதும் அம்மா

எல்லாமே எனக்கு அம்மாதான்.

யோ. தசேக்காந்தன்
வயது - 11
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்.

# அப்பா



எனக்கு உணவு தருபவரும் அப்பா
எனக்காய் உழைப்பவரும் அப்பா
என்னைப் பார்ப்பவரும் என் அப்பா
என்னை அள்ளி அணைப்பவரும் அப்பா
என்னைப் படிக்க வைப்பவரும் அப்பா
எனக்கு எல்லாமே எனது அப்பாதான்

ந. சாந்தன்
வயது - 11
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்.

# நான் ஒரு வைத்தியரானால்.....

ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்வேன்.

என்னை நாடி வருவோருக்கு தயங்காமல் உதவி செய்வேன்.

பல உயிர்களை காப்பேன்.

நோயாளர்கள் வந்தால் அவர்களை விசாரித்து தகுந்த சிகிச்சையை வழங்குவேன்.

நிச்சயமாக மலையகத்துக்கு ஒரு வைத்தியராக வருவேன்.

பி. தர்ஷிக்கா
வயது - 11
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.



B. தர்சிக்கா

## நான் விஞ்ஞானி என்றால்....

இன்றைய உலகை விஞ்ஞான உலகம் என்கிறோம். இந்த உலகில் விஞ்ஞானம் கலக்காத கண்டுபிடிப்புக்கள் எதுவும் இல்லை. இதனை நன்கு உணர்ந்தே சந்தோசத்தோடு எனது இலட்சியமாக எடுத்துக்கொண்டேன். மக்களுக்கும், சூழலுக்கும் தீங்கு விளைவிக்காதவகையில் கருவிகளைக் கண்டுபிடிப்பேன். மக்களுக்கும், சமூகத்திற்கும் பயன் தரும் சாதனைகளை நிலைநாட்ட முயல்வேன். ஆக்கபூர்வமான பணிகளுக்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன் பெற்றுக் கொடுப்பேன். மக்களை அழிக்கும் ஆயுதமாகவோ, இரசாயனமாகவோ எனது கண்டுபிடிப்புகள் இருக்காது.

**மணிமாறன்**
வயது - 15
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# பூசணிக்காய்

குண்டு குண்டு பூசணிக்காய்
குடல் நிறைந்த பூசணிக்காய்
விதைகள் கொண்ட பூசணிக்காய்
விதம் விதமா பூசணிக்காய்

குமார் வீட்டுப் பூசணிக்காய்
குமாரி நட்ட பூசணிக்காய்
கயிறு போன்ற கொடியைக் கொண்டு
காய்க்கும் அந்தப் பூசணிக்காய்

உலகம் எங்கும் செல்லும்
சந்தையில் கூட இருக்கும்
பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்
அழுகினால் அது மணக்கும்.

வீட்டு மூலையில் தொங்கி நின்றும்
கண்ணில் படும் பூசணிக்காய்.

சி. கேதீஸ்
வயது - 16
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி.

# பறந்த நரி

ஓர் ஊரில் மலைப்பகுதி ஒன்று இருந்தது. அந்தப் பகுதியில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரி ஒவ்வொரு நாளும் ஒரு மரத்தின் கீழ் போய் உறங்குவது வழக்கம். அம்மரத்தில் கழுகு ஒன்று வந்து தங்கியது. அப்போது கழுகும் நரியும் நண்பர்கள் ஆயின.

ஒருநாள் வழக்கம் போல மரத்தடியில் நரி வந்தது. மரத்தின் மேல் கழுகு அமர்ந்திருந்தது. அப்போது நரி கழுகிடம் "நண்பா! நீ அழகாய் வானத்தில் பறக்கிறாய். எனக்கும் பறப்பதற்கு ஆசையாக உள்ளது. எனக்கு பறக்க கற்றுத்தா" என்று கேட்டது. "நண்பா என்னைப் போன்று உனக்கு இறகுகள் இல்லையே" என்றது கழுகு. அதற்கு நரி "இல்லை இல்லை எனக்கு பறக்க கற்றுத்தா" என்று பிடிவாதமாக நின்றது. ஒன்றும் செய்யமுடியாதென்று எண்ணிய கழுகு அதன் மேல் ஏறுமாறு கூறியது.

நரி மகிழ்ச்சி அடைந்து கழுகின் மேல் ஏறிச் சென்றது. பின் நிலத்திலிருந்து சற்று உயரப்பறந்தவுடன் விழுந்தாலும் பாதகம் வராது என்று கருதிய கழுகு "இப்போது உன் ஆசை நிறைவேறட்டும். பற" என்று நரியிடம் சொன்னது. ஆனால் நரி "நான் பறப்பதற்கு இந்த உயரம் போதாது நண்பா! இன்னும் உயரப் பற" என்றது. "ஆசைக்கும் எல்லையுண்டு. சொல்வதைக்கேள் விழுந்து வீணாகச் சாகப்போகிறாயா?" என்றது கழுகு. "இல்லை நான் சொல்கிறேன். நீ இன்னும் பற" என்றது நரி. கழுகு இன்னும் உயரம் பறந்த பின் "இப்போது குதி" என்றது.

நரி குதித்தது. என்ன பரிதாபம், மலையின் மீது விழுந்து நரி பரிதாபமாய் இறந்தது.

ச. கேரமதி
வயது - 14
மட்/மாவடிமுன்மாரி. அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.


கிடைக்குமா
விடுதலை
Y. யோகராணி

# பிள்ளையின் நிலை

நான் மிகவும் பின்தங்கிய கந்தலோயாத் தோட்டத்தில் சீட்டுமலை என்ற தோட்டத்தில் வசிக்கிறேன். எங்கள் லயத்தில் எங்களுக்குப் பக்கத்தில் ஒரு குடும்பம் இருக்கிறது. அக் குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் மூன்று பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டு பிள்ளைகள் பள்ளி செல்கிறார்கள். கடைசிக் குழந்தைக்கு ஒரு வயது. தாயும் தந்தையும் தேயிலைத்தோட்டதில் வேலை செய்யாததால் அவர்களுடைய பிள்ளையை பிள்ளை மடுவத்தில் சேர்க்க முடியாது.. இதனால் பெற்றோரில் ஒருவர் ஒருநாளைக்கு ஒருவர் என வீட்டிலிருந்து தங்களது குழந்தையை பார்த்துக்கொள்ள வேண்டும். அல்லது பள்ளிசெல்லும் அவர்களின் மூத்தமகள் வீட்டில் இருந்து குழந்தையைப் பார்த்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் இருப்பதைவிட மூத்தமகள் இருப்பதுதான் அதிகம். இதனால் இவள் பள்ளிசெல்வது குறைவு. இந்தச் சிறுமி படிக்கவேண்டிய நேரத்தில் படிக்க முடியாமல், விளையாடக்கூடிய வயதில் விளையாட முடியாமல் கஷ்ரப்படுகிறாள்.

இந்தக் கொடுமைக்கு யார் காரணம்?

தி. அனுஷா
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# வேண்டாம்

அதிக ஆசை வேண்டாம்

அவுஸ்ரேலியாப் பயணம் வேண்டாம்

ஆழ்கடலில் மடிய வேண்டாம்

ஆபத்து நமக்கு வேண்டாம்

இல்லத்தை இழக்க வேண்டாம்

இரும்பாய் வேலை செய்ய வேண்டாம்

ஊராரை மறக்க வேண்டாம்.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு வேண்டாம்

ஊமையாய் இருக்க வேண்டாம்

ஒப்பாரி வைக்க வேண்டாம்

மந்தையாக வேண்டாம்.

மரமாக நிற்க வேண்டாம்.

தி. சிவதரன்
வயது - 18
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்

# நரிகளும் நண்டுகளும்

ஒரு நாள் நரி உணவு தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. பின் அது பசியுடன் ஒரு குளக்கரையோரமாக வந்தபோது நண்டு ஒன்றைக் கண்டது. உடனே அது அந்த நண்டைப் பிடித்தது. நண்டு கூறியது "என்னைப் பிடித்து உண்டால் உனது வயிற்றுக்குக் காணுமா? நான் போய் எனது கூட்டத்தைக் கூட்டிவருகின்றேன்" என்றது. "நீ போய் உனது கூட்டத்தைக் கூட்டிவா" என்று நரியும் சம்மதித்தது. நண்டும் தனது கூட்டத்தைக் கூட்டி வரப் போனது.

நண்டு தனது கூட்டத்தைக் கூட்டிவந்து ஒவ்வொருவரையும் ஒவ்வொரு குழி தோண்டச் சொன்னது. பின்னர் அவர்களிடம் "தனதனதந்தோம் அவர் அவர் பொந்தே" என்று நான் சொன்னால் நீங்கள் எல்லோரும் உங்கள் பொந்துகளுக்குள் புகுந்து கொள்ளவேண்டும் என்று கூறியது. அவ்வேளை நரிக் கூட்டமும் அங்கு வந்துவிட்டது. நண்டு "தனதனதந்தோம் அவர் அவர் பொந்தே" என்று கூற நண்டுகள் முழுவதும் குழிக்குள் புகுந்து விட்டன.

ஏமாற்றம் அடைந்த நரிகள் காட்டிற்கு கவலையோடு சென்றன.

நா. லோயேந்தன்
வயது - 12
மட்/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம்

# மூன்றெழுத்து பொறுப்புக்கள்

பள்ளி என்பது மூன்றெழுத்து–அங்கு
சென்று படிப்பது நம் பொறுப்பு.

கல்வி என்பது மூன்றெழுத்து–அதை
கற்று முடிப்பது நம் பொறுப்பு.

அன்பு என்பது மூன்றெழுத்து–அதை
மற்றவருக்களிப்பது நம் பொறுப்பு.

திறமை என்பது மூன்றெழுத்து–அதை
வெளிக்காட்டுவது நம் பொறுப்பு.

கோபம் என்பது மூன்றெழுத்து – அதன்
திசையைக் காண்பது நம் பொறுப்பு.

பொறுமை என்பது மூன்றெழுத்து–அதை
கடைப்பிடிப்பது நம் பொறுப்பு.

சா. சதிசனா
வயது - 14
மட்/மாவடிமுன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

# End of childhood

(ஈரானியத் திரைப்படம்)

நான் இவ்வளவு நாளாக பார்த்த தமிழ், பிரான்ஸ், ஆங்கில, ஈரான் மற்றும் சீனத் திரைப்படங்களில் எனக்குப் பிடித்த சிந்திக்க வைத்த திரைப்படம் ஈரான் மொழியினால் தயாரிக்கப்பட்ட End of child hood என்ற படமாகும். இத் திரைப்படமானது தமிழ்ப் படங்களை விட முற்றிலும் வேறுபட்ட கதை அம்சத்தைக் கொண்டதாகும்.

நான்கு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட இப்படமானது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு துன்பத்தினால் அவதிப்படும் அவல நிலையை எடுத்துக்காட்டுகிறது. ஈரான், ஈராக் யுத்தக் காலப்பகுதியில் எல்லைப் பகுதியில் நடை பெறும் சம்பவங்களை மனதில் பதியும்படி சித்தரிக்கின்றது. ஈரான், ஈராக் யுத்தத்தை ஒரு செய்தியாக மட்டுமே தெரிந்திருந்த எனக்கு அந்த யுத்தத்தின் கொடூரத்தை இத்திரைப்படம் உணர்த்தியுள்ளது.

இதில் ஒரு தனிக்குடும்பம் தன் உயிரைக் காப்பற்றிக் கொள்ள எப்படியான முயற்சிகளை செய்கிறதோ அதைப் போன்றே யுத்தம் நடைபெறும் எல்லா நாடுகளிலும் வாழும் குடும்பங்களும் இப்படித்தான் துன்பப்பட்டிருப்பார்கள் என்றுநான் உணர்ந்து கொண்டேன்.



ஆ. தயாகரன்
வயது - 16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டி.

# காலைக் காட்சி

இயற்கையை பொழிந்தது காலை
சோலைகள் பரிசளித்தன மலர்களை.

இதமான காற்று உடலை வருடியது
இனிய உணர்வை கற்றுக் கொடுத்தது.

மலர்கள் வாசனை பரப்பின.
மேகங்கள் வானில் நீந்தின.

பாடசாலை நோக்கி
பாலர்கள் சென்றனர்.

வெகு நேரத்தில் வரவேண்டும் என்ற
ஏக்கத்தில் பலர் வேலைக்கு ஓடினர்.

இரை தேடி பறவைகள் சென்றன
கிளிகள் மழலை பேசின.
காகங்கள் கரைந்து காலையை வாழ்த்தின
குயில்கள் கூவி மற்றோரை எழுப்பின.

நா. லோச்சினி
வயது - 15
மட்/கொல்லநுலை விவேகாநந்தா வித்தியாலயம்.

# வெளிநாடு சென்ற எனது அப்பா

ஐந்து வருடங்கள்
முகம் காணா இடத்தில்.

மனைவியின்றி மக்களின்றி
சொந்தம் சுற்றமின்றி
தூரச் சென்று விட்டாயே அப்பா

உன்னை நினைத்து என்
பிஞ்சு மனம் வாடுது அப்பா
பள்ளி சென்றும்
படிக்க முடியவில்லையப்பா.

கஸ்ரமான வேலையை
சுகம் என்று சொல்லி
வாடுகிறாயே அப்பா
இதையெல்லாம் விட்டு
நம் நாடு திரும்ப
வழிவருமெப்போ அப்பா.

தி. தியாயினி
வயது- 16
மட்/கொல்லநுலை.விவேகானந்தா வித்தியாலயம்

# தொல்லை [குறும்படம்]

ஒரு குடும்பத்தில் சந்தோசத்துடனும் மகிழ்சியுடனும் வாழ்ந்து வந்த சிறுவன் அவனது குடும்பத்தை இழந்து ஒருவருடைய பாதுகாப்பும் இன்றி வசிப்பதற்கு வீடும், உண்ண உணவும் இல்லாமல் கடும் துயரத்துடன் காலத்தை கடத்தி வருகின்றான்.

இச் சமூகத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் இப்படித் துன்பப்படுபவர்களை ஏனோ தானோ என்று நினைக்கிறார்கள். ஏழைச் சிறுவர்கள் அவர்களின் அருகில் போனாலே துரத்துகின்றார்கள்.

இந்த குறும்திரைப்படத்தை பார்த்த போது அந்தச் சிறுவனைப் பற்றித்தான் மிகவும் கவலைப்பட்டேன். ஏனென்றால் அச்சிறுவன் களவெடுப்பதும் இல்லை. பொய்சொல்வதும் இல்லை. மற்றையவர் பொருளுக்கும் ஆசைப்படுவதில்லை. இப்படியான ஒரு நல்ல சிறுவனோ யாரும் துணையில்லாமல், ஒரு குழாயினுள் பட்டினியுடன் வாடுகிறான். அவனுக்கு ஒரு வேளை உணவேனும் கொடுக்க எவரும் முன் வரவில்லையே என்று எனது மனதில் தோன்றியது.

படத்தில் அச் சிறுவன் துன்பப்படுவதைப் போல் எமது சமூகத்திலும் பல சிறுவர்கள் நிஜத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறுவர்களுக்கு உதவ வேண்டியது நமது சமூகத்தின் பொறுப்பில்லையா?

ஜீ. ஜீவராணி
வயது - 16
நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம்

# அம்மாவுக்கு

அம்மா எங்கே போய்விட்டாய்
என்னிடம் சொல்லாமல்.

என்னை விட்டுப் பிரிந்து
பதின்மூன்று வருடங்கள்.

உன்னைப் பார்ப்பதற்காய்
இப்போதும் தவிக்கின்றேன்.

இரண்டு வயதிலிருந்து
உனைத் தேடி
என் இதயம்
துடிக்கின்றது.

அப்பா இருந்தும்
யார்தான் இருந்தும்
உன்னைப் போன்று
யாருமே இல்லை அம்மா.



அம்மா என்று சொல்வதற்கு
ஒரு தாய் இல்லாமல்
நான் படும் துயரம்
எனக்குத்தான் தெரியும்.

ர. றணிசா
வயது - 16
மட்/கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.

# Beijing Bicycle

(சீனத் திரைப்படம்)

சினிமா என்று சொன்னவுடனே நினைவுக்கு வருவது, பாடல், நகைச்சுவை, கதாநாயகன்–கதநாயகியின் காதல், வில்லனின் சண்டித்தனம் போன்றவைதான். ஆனால் இப்படம் வித்தியாச மானது.

ஒருவர் அவரது சைக்கிளைத் தொலைத்துத் தேடுவதும் அதைக் கண்டுபிடிக்க அவர் படும் இடர்பாடுகளும் சொல்ல முடியாத சோகங்கள்.

இதில் சைக்கிள் உரிமையாளர், தொலைந்துபோன சைக்கிளைக் கண்டு பிடித்து அதை வைத்திருப்பவனோடு பலமுறை சண்டை பிடித்ததும், அந்தச் சைக்கிளை தனது என்று இருவரும் உறுதியாக இருந்ததும், எப்படியெல்லாமோ சண்டையிட்டவர்கள் பின் ஒற்றுமையாவதும், ஒரே சைக்கிளை மாறி மாறித் தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவதும் படத்தைப் பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டின.



கு.குவேந்திரராணி - அ.கிருடாழினி - ச.சுவிசங்கரி
வயது - 14
அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

# வேண்டாம்

சிறுவர்கள் நாம் வாழ்வதற்கு
சுத்தமில்லா சூழல் வேண்டாம்.

உழைத்து வாழும் சூழலில்
பறித்துக் கொள்வோர் வேண்டாம்.

எமது கருத்துக்களை ஏற்காத
பெரியோர்கள் வேண்டாம்

தீயதையே பேசும்
நண்பர்கள் வேண்டாம்.

படிப்பதற்கு ஒழுங்கில்லாத
பாடசாலைகள் வேண்டாம்

நமக்கு நன்மை தராத
கருத்துக்கள் வேண்டாம்.

எம்மை திசை திருப்புகின்ற
தொலைக்காட்சி, படங்கள் வேண்டாம்.

ப. கேதீஸ்வரி
வயது - 15
மட்/மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை




P. ரசிகா

# நான் ஆசிரியரானால்

மாணவர்களுடன் அன்பாக பழகுவேன்.

மாணவர்கள் ஏதாவது தப்புகள் செய்தால் தண்டிக்க மாட்டேன்.


மாறாக ஆறுதல் கூறுவேன்.

எல்லோருக்கும் ஒரே அளவில் படித்துக் கொடுப்பேன்.

மாணவர்களை கல்விச் சுற்றுலாவுக்கு கூட்டிச் செல்லுவேன்.

நாள்தோறும் பாடசாலைக்கு வருவேன்.

பி. துஷாந்தினி, எ. சத்தியசீலன்
வயது -13
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.


படம்

# ஓட்டைப் பானையின் சுயசரிதை

நான் உருவாகிய இடம் புளியன்குடாவாகும். என்னை ஒரு குயவர்தான் உருவாக்கினார். களி மண்ணை எடுத்துப் பிசைந்து என்னையும் என்னுடைன் பல உறவினர்களையும் உருவாக்கி உமியில் வைத்துச் சுடவைத்து அழகாக்கினார்

பிறகு ஒரு நாள் என்னையும் என்னுடன் பல உறவினர்களையும் அவர் எடுத்துச் சென்றார். எங்களை எங்கு எடுத்துச் செல்கின்றார் என்று அப்போது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் சென்று கொண்டிருந்த பொழுது எங்களுக்கிடையில் சண்டை எழும்பி இரண்டு நண்பர்கள் உடைந்து இறந்துவிட்டார்கள். எங்களை ஏற்றிக்கொண்டு சென்றவர் உடனே இறங்கி உடைந்த இரண்டு பேரையும் அந்த இடத்தில் தூக்கி எறிந்துவிட்டு எங்கள் அனைவரையும் இறுக்கி அவருடைய துவிச்சக்கர வண்டியில் வைத்துக் கட்டினார். நாங்களும் உடைந்து விடக்கூடாது என்பதற்காக அசையாது ஒருவருடன் ஒருவர் சண்டையும் பிடிக்காது ஒற்றுமையாக இருந்தோம். அதன்பின்னர் எங்களுக்கு எந்த இடத்தால் செல்கின்றோம் என்று தெரியவில்லை. பிறகுபார்த்தால் எங்கள் அனைவரையும் ஒரு இடத்தில் இறக்கிவைத்தார்.

எங்களுடைய மனதில் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் என்னவென்றால் நாங்கள் அனைவரும் வந்த இடம் எங்களுக்கு நவீனமாக இருந்தது. எங்களை ஒரு மாளிகை போன்ற கடைக்குள் கொண்டுசென்றார். அப்போது நான் நினைத்தேன் நாம் வாழும் இடம் இதுதான் இனி எமக்கு சொர்க்க வாழ்க்கைதான் என்று. அவர் எங்கள் அனைவரையும் அந்தக் கடைக்கார முதலாளியிடம் கொடுத்து விட்டு பணத்தை வாங்கிச் சென்றுவிட்டார். எங்கள் அனைவரையும் அன்றிரவு அவருடைய கடைக்குள் வைத்திருந்தார்.

மறுநாள் காலை விடிந்தது. எங்கள் அனைவரையும் வெளியில் தூக்கிக்கொண்டு வைத்துவிட்டு அவர்கள் வியாபாரத்தைத் தொடங்கினார்கள். நாங்கள் அனைவரும் எண்ணியிருந்தது போல் அறைக்குள் சந்தோசமாக இருக்கவில்லை. எங்களை அந்த நடு வெயிலில் வைத்து வாட்டினார்கள். அனைவரும் பெரிதும் மனம் நொந்தோம். எம்முடைய வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று கவலைப்பட்டோம்.

ஒருநாள் வழமைபோல் நாங்கள் வெயிலில் இருக்கின்ற போது ஒருவயது முதிர்ந்த பாட்டி என்னை வாங்கினார். அந்தப் பாட்டியுடன் வந்தவரும் இரண்டு பானைகளை வாங்கினார். பாட்டி என்னை வாங்கிக்கொண்டு அவருடைய வீட்டிற்கு கொண்டு சென்றார். எனக்கு மிகமிக சந்தோசமாக இருந்தது. நாம் இனிமேல் வெயிலில் வாடத் தேவையில்லை என்று எண்ணினேன்.

என்னைக்கொண்டு பூஜை அறைக்குள் பூட்டி வைத்தார்.நான் யோசித்தேன் என்னை ஏன் வாங்கிக்கொண்டு வந்து பூட்டிவைத்திருக்கிறார் என்று. அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். நாளைக் காலை தைப்பொங்கல் என்று பேசினர். எனக்கு பெரும் மகிழ்ச்சி. மறுநாள் காலை விடிந்ததும் என்னைக் குளிப்பாட்டி பட்டுச் சாத்தி என்னை அழகுபடுத்தினர். பின்னர் பொங்கல் முடிந்ததும் கழுவி பூஜை அறைக்குள் வைத்தார்

சில நாட்கள் கழிந்தன. பாட்டி திரும்பவும் என்னை எடுத்து கழுவி காயவைத்தார். நான் காய்ந்து கொண்டிருந்தபோது அங்கு விளையாடிக் கொண்டிருந்த அவளது பேரன் என்மேல் கல்லால் அடித்து விட்டான். என்மேல் பெரியதொரு ஓட்டை விழுந்து விட்டது. இதைக் கண்ட பாட்டி பெரும் கோபம் கொண்டு பேரனை அடித்தார். எனக்கு ஓட்டை விழுந்ததும் பெரும் வேதனையாக இருந்தது. அதன் பின் என்னைத் துண்டு துண்டாக்கி, மண்ணுக்குள் போட்டனர்.

எங்கிருந்து வந்தேனோ அங்கேயே போய்விட்டேன். என்னை அறிந்தவர் கைகளில் கிடைத்தால் மறுபடியும் உருவம் பெறுவேன்.

இ. குகேந்திரன்.
வயது -15
மாணிகவாசகர் சிறுவர் இல்லம்.
சந்திவெளி.

# ஆண்டார்

ஆண்டாரைப் பார்த்து நான் ரசிப்பேன்

ஆண்டாரைப் போல் அக்கா பொட்டுவைப்பாள்.

ஆண்டார் உலகிற்குகு ஒளியைத் தருவார்.

ஆண்டார் அமாவாசையில் காணாமற் போவார்.

ஆண்டார் அடிக்கடி தேயந்தும் போவார்.

ஆண்டாருக்குள் ஔவையார் இருப்பாராமே?

சி. அழகவல்லி
வயது - 15
மட்/நாற்பதுவட்டை விவேகானந்தா வித்தியாலயம்

# நாளைய கந்தலோயா

தற்போது கந்தலோயா தோட்டம் இயற்கையில் எழில்மிகுந்து காணப்படுகிறது. அழகான காடுகள், அருவிகள், ஓடைகள் என இயற்கைச் சூழலைக் கொண்டுள்ளது. ஆனால் இந்த தோட்டத்திற்கு வேறொரு பக்கமும் உள்ளது. சீரற்ற பாதை, உடைந்த வீடுகள், மின் பாயாத மின்சாரத் தூண்கள், ஆசிரியர்களை நிறைவுசெய்யாத பாடசாலை என்பவையே அவை. அனைத்தும் எங்கள் அனைவரது ஒற்றுமையாலும் அபிவிருத்தி அடையும். கண்டிப்பாக இந்த பிரதேசம் பெயர்பெற்ற இடமாக மாறும். எதிர்காலத்தில் என் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வார்கள். கந்தலோயாவில் ஒரு நல்ல பாடசாலை, நல்ல வைத்தியசாலை, போக்குவரத்து வசதி, மலசலகூடம், மின்சார வசதி என்று பல அடிப்படையான வசதிகள் . உருவாகி, வருங்காலத்தில் சிறந்த பிரதேசமாக கந்தலோயா காணப்படும். நாங்கள் மாற்றியமைப்போம்.

ரா. பிரதீப்
வயது -11
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.

# வேண்டாம்

குடிக்க வேண்டாம் மதுவை குடிக்க வேண்டாம்
குடித்து குடித்து பணத்தை விரயம் செய்ய வேண்டாம்


திரிய வேண்டாம் வீணாய் திரிய வேண்டாம்
வீணராகத் திரிவோருடன் சேர வேண்டாம்

திருமணம் வேண்டாம் இளம் வயதில் திருமணம் வேண்டாம்
கெடுக்க வேண்டாம் பிஞ்சு மனதை கெடுக்க வேண்டாம்.

பறிக்க வேண்டாம் பாசத்தை பறிக்க வேண்டாம்
மதிக்க வேண்டாம் மதியாரை மதிக்க வேண்டாம்.


தி. மோகன்ராஜ்
வயது - 17
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்

எமது தோட்ட துரையின் பங்களா



எமது பாடசாலை

S. புஸ்பகுமார்



# நான் வசிக்கும் கிராமம்

எனது கிராமத்தின் பெயர் நாற்பதுவட்டை. மட்டக்களப்பு நகரிலிருந்து மிகத்தொலைவில் உள்ளது. எங்கு பார்த்தாலும் மரம், செடிகளுடன் பசுமையாக காட்சி தரும். இங்கு போக்குவரத்து வசதிகள் குறைவு. இதற்கான காரணம் வீதிகள் செப்பனிடப்படாமல் மிகவும் மோசமாக இருப்பதே என நான் நினைக்கின்றேன். நான் படிக்கும் பாடசாலை நாற்பதுவட்டை விபுலாநந்தா வித்தியாலயம்.

இங்கு வறுமையில் பல குடும்பங்கள் வாடுகின்றன. எனது கிராமத்தில் ஆரம்பத்தில் சேனைப்பயிர்ச் செய்கை செய்தார்கள். ஆனால் இப்போது ஆடு, மாடு, கோழி வளர்ப்பு போன்றவற்றைச் செய்வதோடு கூலிவேலையும் செய்கின்றனர். அத்தோடு விறகு விற்றல், மீன்பிடித்தல், தேன் எடுத்தல் என்பனவற்றையும் செய்கின்றனர். இவ்வளவு கஸ்ரப்பட்டு கடுமையாக உழைத்தும் வருமானம் போதாமையாக உள்ளது.

எனது கிராமத்தில் கூத்தாடுதல், காவடி எடுத்தல், கரகமாடுதல் போன்ற கலைவடிவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இங்கு யானையின் நடமாட்டம் அதிகம். யானை வருவதை எமது ஊர்மக்கள் அறிந்தால் பெரியசத்தம் போடுவார்கள். தீப்பந்தம் காட்டுவார்கள். சங்கு ஊதுவார்கள். வெடி கொழுத்தியும் துரத்தியிருக்கின்றார்கள்.

எனக்கு ஒரு ஆசையுண்டு. நான் நன்றாக படித்து ஒரு ஆசிரியராக வரவேண்டும். இதனால் எனது கிராமத்துப் பிள்ளைகளை கல்வியில் முன்னேற்ற என்னால் முடியும். அதன்மூலம் வளர்ச்சியடைந்த கிராமமாக மாறவேண்டும் என்பதுதான் எனது ஆசை.

ந. லோயேந்தன்
வயது - 12
மட்/.நாற்பதுவட்டை விவேகானந்தா வித்தியாலயம்

# சுற்றித் திரியும் மனிதர்

சுற்றித் திரியும் மனிதர்கள் நாங்கள்

ஊர்ந்துசெல்லும் எறும்புகள் நாங்கள்

பறக்கும் வானம்பாடிகள் நாங்கள்

மேகங்கள் எல்லாம் நமக்கு சொந்தங்கள்

காடுகள் மேடுகள் நமது வளங்கள்

இயற்கையான அறிவு எமக்கு உண்டு

எதையும் சிந்திக்கும் ஆற்றல் எமக்கு உண்டு

கல்விகற்கும் உரிமை எமக்கு உண்டு.

பெற்றோருடன் வாழும் உரிமை எமக்கு உண்டு

இனிமையாக நாங்கள் வாழ

இயற்கையான சுதந்திரம் காப்போம்

சி. கேதீஸ்
வயது - 16
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்.
சந்திவெளி

# Salaam Bombay (இந்தியத் திரைப்படம்)

உலகத்தில் நடந்து வருகின்ற கெட்ட சம்பவங்களை இன்றுதான் நான் தெரிந்து கொண்டேன். இப்படத்தைப் பார்த்ததால் மனம் நொந்துவிட்டது.

சிறுவர்களை மதித்து அவர்களை நல்வழிப்படுத்தவேண்டியவர்களே சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்றார்கள். மதுபானம் வாங்குவதற்கும், சிகரட் வாங்குவதற்கும் சிறுவர்களை அனுப்புகின்றார்கள். குழந்தைகள் எனப் பார்க்காமல் பாலியல் துஷ்ப் பிரயோகத்திற்கு உட்படுத்துகின்றார்கள். அவர்களின் பிஞ்சு மனதையும் சிதைக்கின்றார்கள்.

எமது சமூகத்திலும் பற்பல சம்பவங்கள் நடந்துகொண்டு வருகின்றது. சின்னப்பிள்ளைகள் எனப் பார்க்காமல் அவர்களை வேலைக்கு அமர்த்துகின்றார்கள். வேலைசெய்ய யாரும் இல்லை என்பதற்காக பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்திருக்கின்றார்கள். சிறுவர்களுக்கு எது விருப்பம் என்று தெரியாமல் பிடிக்காததை செய்யுமாறு வற்புறுத்துகின்றார்கள். இவ்வாறு சீரற்ற செயல்கள் நடக்கின்ற சமூகத்தை மாற்றி புதியதொரு சமூகத்தை உருவாக்க வேண்டும். சிறுவர்களை நல்லவர்களாக வழிப்படுத்த மிகவும் தேவையானது பெற்றோரின் அரவணைப்பே. தாய், தந்தை இல்லாத சிறுவர்கள் தெருவில் பிச்சை எடுத்து வாழ்கின்றார்கள். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பதைப் புரிந்து பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி அவர்களை எதிர்காலத்தில் ஒரு நற்பிரஜையாக மாற்ற வேண்டும். இதுவே சிறுவர்களில் அக்கறையுள்ள ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும் என நான் கருதுகின்றேன்.

சிறுவர்கள் கெட்டுப் போயும் மற்றைய சிறுவர்களையும் கெட்டுப்போக வைக்கின்ற நிலை உருவாகக் கூடாது. ஒவ்வொரு சிறுவர்களையும் கஷ்ரப்படுத்தும் பெரியவர்களை நாம் வெறுக்கின்றோம்.



வே. கோசலாதேவி - அ. நித்தியகலா,
வயது -16
மட்/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலம்.

# அன்பின் தாயே

கண்ணீர் சிந்தி
படாத இடரில் வெந்து
எனையீன்றவள்
என் அன்னை.

துன்பமின்றி வாழ தினமும்
தன்னை வருத்தி உழைப்பவள்
என் அன்னை.

நான் படித்து உயர்ந்து
கிராமத்திற்குச் சேவை ஆற்றவேண்டுமென்று
ஆசைப்படுபவள்
என் அன்னை.

குடும்பச் சுமையைத் தாங்கி
வெளிநாடு சென்று
கஷ்டப்படுபவள்
என் அன்னை.

அன்னையே!
உன் ஆசை நிறைவேற்றும்
கனவோடு
நான் வாழ்கின்றேன்.

யோ. கொபி,
வயது-12
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி.


# A Man escaped

(பிரான்ஸ் திரைப்படம்)

கதாநாயகன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதோடு இத் திரைப்படம் ஆரம்பமாகிறது. செல்லும் வழியில் தப்பிக்க முயற்சி செய்கின்றான். மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விலங்கிட்டு சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றான். கிடைத்த ஒரு சில பொருட்களைப் பயன்படுத்தி, அத்தோடு சில நபர்களின் உதவியையும் பெற்று இறுதியாக தப்பித்துச் செல்கின்றான்.

தமிழ் படங்களில் கதாநாயகர்கள் ஏழைகளாக இருந்தாலும் ஆடம்பரமாக இருப்பார்கள். சக நடிகர்களை விட அழகாகவும் விளங்குவார்கள் ஆனால் இப்படத்தில் இவை அனைத்தும் வேறுபட்டு இருக்கின்றது. தமிழ்ப் படத்தைப் போல் பாட்டு என்பவை இல்லாமலும் படம் தயாரிக்கலாமென விளங்கிக் கொண்டேன். A Man Escaped என்ற படத்தைப் பார்க்கும் போது மனதுக்குள் சின்னதாக ஒரு சஞ்சலம் ஏற்படுகின்றது. எமது தமிழ் சினிமா எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை மீள்பரிசீலனை செய்யும் விதத்தில் இருக்கின்றது.

கைதியானவன் தான் சமூகத்தில் இணைந்து வாழ விருப்பம் கொண்டவனாக இருப்பதுவும், அதற்கான ஒரு முயற்சியாக சிறைக்கூடத்திலிருந்து தப்பிக்க எண்ணுவதுமாக இப்படம் அமைகிறது. சினிமா ரசிகர்கள் சிறைக் கைதியின் பக்கம் தங்கள் கவனத்தை செலுத்தும் விதமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இது வரைக்கும் நாங்கள் பார்த்த படங்களில் இதுவே எனக்குப் பிடித்ததாக இருக்கின்றது. நான் இதுவரைக்கும் இவ்வாறான ஒரு படத்தை பார்த்ததும் இல்லை. A Man Escaped சிந்தனைக்கு எட்டும் விதத்தில் இருக்கின்றது.




**கே. தீபன்**
வயது -16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டி.

# என் கனவில் ஒரு நாள் ..................

ஆழ்ந்த நித்திரையில் என்னை ஏதோ ஒன்று உசுப்புகிறது பேன்ற நினைவு.

என்ன எனக் கேட்கிறேன். எழும்படா என்ற மெல்லிய குரல் கேட்கிறது.

பார்க்கிறேன். அருகில் என் அம்மா.

மகனே நான் சொல்லப் போவதைக் கேள் என்கிறாள் எனது தாய். தாயின் ஏக்கத்துடனான அந்த வேண்டுகோள் என்னை நெகிழ வைக்கிறது.

என்னம்மா என கேட்கிறேன். மகனே அப்பாவும் இறந்து நாளாகின்றது உன் அக்கா தங்கையை காப்பாற்றுகின்ற பெரிய பொறுப்பு உன்னிடமே இருக்கிறது. நம்மட பக்கத்து வீட்டு நாதன் அண்ணனும் வெளிக்கிடுறான் அவுஸ்ரேலியா போகையாம். காசு போய் இறங்கின பிறகுதானாம். நல்ல இடமொன்றில் இறக்கிறன் என்று ஏஜன்சி சொல்லியிருக்கானாம். அதான் மகன் நீயும் ஓமென்றால் உன்னையும் அனுப்பலாம் என்று கேக்கிறன். என்கிறாள் அம்மா.

அம்மா தண்ணி என்றாலே எனக்கு சரியான பயம் என்று உனக்குத் தெரியும். அப்படியிருக்க இப்படியொரு கேள்வியை நீ கேக்கிறாய் அம்மா. எனக்கு ஏலாது அம்மா. தண்ணியை அதுவும் கடல நினைச்சா உடலெல்லாம் நடுங்குதம்மா.

மகனே இதுதான்டா ஒரு சந்தர்ப்பம் இத விட்டா அங்கால... சொல்ல முடியாமல் எழும்பி நடக்கிறாள் அம்மா.

அம்மா அம்மா எனக் கூக்குரலிட்ட நான் அவளிடம் அம்மா நான் நல்லா படிக்கிறன் அம்மா பாடசாலையிலும் சேர் எல்லாம் நல்லா படிப்பிக்கிறார். நீ டொக்ரரா வரவேணும் என்று சொல்லியிருக்காங்கள். அதால நான்

இன்னும் நல்லாப் படித்து பெரியாளா வந்து உழைத்து உங்களைக் காப்பாத்துவன் அம்மா. என்று கெஞ்சுகின்றேன்.

அம்மா கோபித்தவளாக சென்று அடுத்த அறையினுள் நுழைவது எனக்குத் தெரிகிறது. மீண்டும் உறங்கிய இடத்தில் அமர்ந்து சிந்திக்கிறேன்.

அம்மாவின் வேண்டு கோளுக்காக போவது என முடிவெடுத்து அம்மாவிடம் சென்று என் முடிவைச் சொல்கிறேன்.
ஒரு மணித்தியாலம் கூடக் கடக்கவில்லை ஒருவர் வந்து என்னை பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார். போகிறேன். சத்தம் போடாமல் மெதுவாக வரவேணும் நான் சொல்லுற இடத்தில் இருக்க வேணும் ஒரு வேன் வரும் ஏற வேணும் சரியா எனச் சொல்லியவாறே கூட்டிச் செல்கிறார்.

ஒரு வேன் வருகிறது. என்னையும் உள்வாங்கி மின்னல் வேகத்தில் செல்கிறது. பயத்தினால் உறைந்து போய் சுற்றும் முற்றும் பார்க்கிறேன். என்னோடு இன்னும் ஒரு நால்வர் ஆளையாள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு கடற்கரையை வேன் அண்மிக்கிறது. அங்கே இறக்கிவிட்டு விரைவாக ஓடி வாருங்கோ என சத்தமிட்டு எங்கள் முன்னால் ஒருவர் ஓடுகிறார். நாங்களும் பின்னால் ஓடி ஒரு படகினை அடைகிறோம்.

எனக்கு உயிரே போகிறது பயத்தினால் ஐயோ அண்ணா நான் வரல்ல வரல்ல எனக் கத்துகிறேன். என்னை ஏசியவாறே தூக்கி படகினுள் போட, படகு புறப்படுகிறது.

அலைகளின் மேலால் பாய்ந்து பாய்ந்து செல்கிறது. ஏறக்குறைய ஒரு ஐந்து கடல் மைல் தூரம் தான் சென்றிருப்போம். பெரிய அலை ஒன்றால் படகு தூக்கி வீசப்படுகிறது. எல்லோரும் கடலினுள் விழ. ஐயோ அம்மா நான் சாகிறேன் எனக் கூக்குரலிட்டவாறே விழிக்கிறேன்.

என் அருகில் என்னை பராமரிக்கும் அண்ணாமார் என்ன தம்பி என்ன தம்பி எனக் கேட்டவாறே என்னை தூக்கி எடுக்கின்றனர். நான்

நடந்தவற்றைக் கூற எல்லோரும் கனவுதானே பயப்பட வேண்டாம் எனக் கூறி என்னை மீண்டும் நித்திரைக்கு அனுப்புகின்றனர்.

காலையில் வானொலிச் செய்தி என் காதில் விழுகிறது. அவுஸ்ரேலியா நோக்கி 100 பேருடன் பயணித்த கப்பல் தரையை அடையும் முன் கடலில் மூழ்கி பலர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறதாம்.

என் கனவை நினைத்தவனாக பாடசாலை செல்லத் தயாராகிறேன்.

கோ. செல்லக்குமார்
வயது -18
விபுலானந்தா சிறுவர் இல்லம்
திருப்பழுகாமம்

# இதுதான் எங்கள் வீடு


மலைகள் சுற்றியுள்ளன. கண்கள் அறிந்த தூரம்வரை தேயிலைச் செடிகள் நீண்டு கிடக்கின்றது. அதற்குள் ஒளிந்திருக்கின்றது எமது தோட்டம். ஆறு மணிக்குப் பிறகு எரியும் மாரியம்மன் கோயில் விளக்கு.

ஓட்டைகள் படிந்த லயம். காலையில் சூரியன் லயங்களை மூடியுள்ள தகரத்தின் ஓட்டைகளூடாக உள்ளே வரும். லயத்துக்கே சொந்தமான ஒரேயொரு பீலிக்கரை. வருடத்திற்கு ஒருமுறை தொழிலாளர்களால் வர்ணம் பூசி அலங்கரிக்கப்பட்ட பெரியதுரை பங்களா. ஒரு லயத்தில் பத்து காம்பராக்கள் இருக்கும்.

இப்படித்தான் இருக்கின்றது எனது தோட்டம் மட்டுமன்றி இன்றய மலையகமும். எமது முன்னோர்கள் பாதுகாத்த கலைகளும் இன்று கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்துகொண்டு வருகின்றன. இதை என்னால் பாதுகாக்க முடியவில்லையே என்பது என்மனதில் ஒரு குற்ற உணர்வு.

என் மலையகத்தின் நிலைகண்டு அதன் கவலைகள், எதிர்பார்ப்புக்களைக் கண்டு தமது இரு கண்களில் ஒரு கண்ணையாவது திறந்துபார்ப்பவர்கள் எம்மில் எத்தனை பேர் இருக்கின்றோம்?

எம். பிரபாத்
வயது -16
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்
நாவலப்பிட்டிய.


தரம் = 11
கே/தெஹி/கந்தலோயா/தமிழ் /வித்தியாலயம்.
நான்

# மலரே !

உன்அழகை
ரசிக்க வைக்கின்றாயே!

உன்னைப் பார்ப்பவர்களுக்கெல்லாம்
விருப்பத்தைக் கொடுக்கின்றாயே!

காலையில் பூத்து
மாலையில் வாடுவதேன்

உனக்கென்ன சோகமா?
வாழ்வே அவ்வளவுதானா?

பூவே நீ இல்லாத இரவில்
உனைப் பார்க்க மனம் ஏங்கும்.

காலையில் நீ மலர்வது
என் இதயத்திலும்தான்.

நீதான் இயற்கையின் அற்புதம்.
உன் மணமோ இனிமையின் சேர்க்கை.

நா. ஜானகி
வயது - 16
மட்/கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.

எனது அப்பா வெளிநாடு. எனக்கு அப்பாவை பார்க்கணும் போல் இருக்கிறது. நான் அப்பாவை வரச்சொல்லப்போகிறேன். ஹலோ அப்பா, உங்களைப் பார்க்கணும்போல் இருக்கிறது. நீங்கள் என்னை பார்க்க வாருங்கள்.

இப்படிக்கு உங்கள்
அன்பு மகள்

அ. அனுஜா
வயது - 11
மட்/மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

# உதவி- பற்றி...

யுத்தத்தினாலும், இயற்கையினாலும் பெற்றோர் , பாதுகாவலரை இழந்த அல்லது வறுமையினால் இல்லங்களில் வளரும் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளுக்கு உதவுவதை நோக்காகக்கொண்டு 2002 இல் உதவி- உருவாக்கப்பட்டது. மூன்றாம் உலகநாடுகளில் வறிய மக்களின் அறிவையும், ஆற்றல்களையும் சுரண்டி, கவர்ச்சிகர NGO சமூகத்தை உருவாக்குகின்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களின் வலைப் பின்னல்களுக்குள்ளும், அரசுகளின் கண்காணிப்பு ஆட்சியின் கீழும் சுயாதீனமாக இயங்குவது என்பது இலகுவானதல்ல. எந்தவிதமான நிரந்தர பண பலமும் இல்லாதபோதிலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிட மிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்வதில்லை என்பதில் உறுதியோடு இருப்பதால் அன்றாடம் உழைத்து வாழும் விரல் விட்டு எண்ணக்கூடிய நண்பர்கள் தருகின்ற சில ஆயிரங்களை வைத்து தமது மண்ணில், தமது சொந்தக் கால்களில் நிற்க முயல்கின்ற மனிதர்களுக்கு குறிப்பாக பிள்ளைகளுக்கு உதவுகின்றோம். 2002இல் செயற்பாட்டினை ஆரம்பித்தபோது யுத்த காலத்தில் அடிப்படைத் தேவைகளுக்கு மட்டுமே உதவ முடிந்தாலும், பின்னர் அறிவியல் ஆளுமையை ஊக்குவிப்பதாக செயற்பாடு மாற்றமடைந்ததுள்ளது. மூடியஃஇறுகிய நிர்வாகக் கட்டமைப்பாக (tightly paired organizational structure) இல்லாமல் ஆரம்பத்திலிருந்தே திறந்தஃநண்பர்களின் இணைப்பாக (Informal network) உதவி- இயங்குகிறது.

செயற்பாடு

பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு ஊக்கமாக உதவி- கதைசொல்லல் நிகழ்வினை ஆரம்பித்து மூன்றுவருடங்கள் ஆகின்றன. 2010 இல் பரீட்சார்த்த முயற்சியாக மட்டக்களப்பு பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்டக்களப்பு சந்திவெளி மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் ஆகியவற்றில் இருந்த பிள்ளைகள் மத்தியில், தேர்ந்தெடுக்கப்பட்ட (இன, மத, மொழி, சாதி, பால் வெறியூட்டல்கள் தவிர்ந்த) கதைகள், கவிதைகளை சொல்லுதலும், உலக சினிமாவைப் பகிர்ந்து கொள்ளலும், அவர்களிடமுள்ள ஆற்றல்களை வெளிப்படுத்த வைத்தலுமாக இச் செயற்பாடு அமைந்திருந்தது.

ஒதுங்கியும், ஒடுங்கியும் இருந்த பிள்ளைகள் தமது ஆற்றல்களை, ஆளுமைகளை அறியவும், அவற்றை வெளிப்படுத்தவும் கதைசொல்லல் உதவியுள்ளது. ஆரம்பத்தில் தயக்கத்துடன் தள்ளி இருந்த பிள்ளைகள் மெல்ல மெல்லத் தாம் நினைப்பவற்றை பகிர்ந்து கொள்ள முயல்கின்றனர் . அந்த முயற்சியின் ஆவணமாய் 2011 இல் "சின்னஞ்சிறிய பூக்கள்.1" நூலினை உங்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

பட்டிப்பளைப்பிரதேசத்தில் யுத்தத்தினாலும், இயற்கையினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டதன் சாட்சியாய் பல கிராமங்கள் உள்ள போதிலும் உதவி-க்கு கிடைக்கும் நிதி மிகவும் குறைவாகவே இருந்ததனால், 2011 இல் நாற்பதுவட்டை, குளுவினமடு, மாவடிமுன்மாரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களை மட்டுமே இச் செயற்பாட்டில் மேலதிகமாக இணைத்துக்கொள்ள முடிந்தது.

2012இல் கேகாலை மாவட்டத்தின் எல்லையிலுள்ள கந்தலோயா தோட்டத்துப் பிள்ளைகளின் மனப்பதிவுகளையும் இணைத்து "சின்னஞ்சிறிய பூக்கள்.2" இனை உங்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

2013இல் பட்டிப்பளைப் பிரதேசத்தில் உள்ள கொல்லனுலை விவேகானந்தா வித்தியாலயம், நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம், மாவடிமுன்மாரி அ.த.க. பாடசாலை என்பவற்றிலுள்ள பிள்ளைகளையும் இணைத்து கதைசொல்லலையும், உலக சினிமாவுக்கு பரீட்சயப்படல் நிகழ்வினையும் நடைமுறைப்படுத்த உதவிவருகின்றோம்.

சூழல்

பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாமை, வறுமை காரணமாக சிறுவர் இல்லங்களிலும் , யுத்தம், இயற்கையினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு படுவான்கரைப்பகுதியின் அடிப்படை வசதிகளற்ற நலிந்து போன எல்லைக்கிராமங்களிலும், இந்தப் பிரதேசங்களை விடவும் இன்னும் பின்தங்கிய கந்தலோயா தோட்டப்பகுதியிலும் வாழும் சிறுவர்கள் தாம் வாழும் சூழல் பற்றி அறிந்து கொள்ளவும், நாகரிக வர்த்தக மோகம், விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள சவால்கள், அரசியல் அடக்குமுறைகளை எதிர்கொண்டு தன்னம்பிக்கையோடு தலை நிமிரவும் அவர்களை ஊக்குவிப்பது அவசியமானது.

கதைசொல்லல் , கதைகேட்டல், ஆடல், பாடல், நடித்தல் விளையாடுதல், எழுதுதல், பகிர்ந்து கொள்ளல் என பிள்ளைகளின் விருப்பிற்கேற்ப ஆற்றுகை வடிவமாய் பிள்ளைகளின் சுய பங்குபற்றுதலுக்கு இடமளிப்பதாக செயற்பாடுகள் அமைகின்றன. தமது ஆற்றலை மட்டுமல்ல மனக்குமுறல்களை வெளிப்படுத்தவும் இந்த ஊடகங்களை பிள்ளைகள் ஆர்வமுடன் பயன்படுத்துகின்றனர்.

உலக சினிமாவுக்கு பரீட்சயப்படல் நிகழ்வும் அவர்களுக்கு புது அனுபவத்தை ஏற்படுத்தியுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட வெவ்வேறு நாட்டு, வெவ்வேறு மொழித் திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்களை பிள்ளைகள் பார்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளோம். இப் படங்களைப் பார்ப்பது மட்டுமன்றி அதுபற்றிய தமது மனப்பதிவுகளைப் பகிரவும், எழுதவும் அவர்களை ஊக்குவிக்கின்றோம். வழமையான தமிழ் சினிமாவுக்கு மட்டுமே பரீட்சயப்பட்டிருந்த பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் புதியதொரு பார்வையை ஏற்படுத்துவதாக இந் நிகழ்வு உள்ளது. உலக சினிமாவை விளங்கிக் கொள்வதில் மொழி தடையாக உள்ளபோதிலும் ஆர்வமாய் பார்க்கும் பிள்ளைகள் காட்சிகளைக் கொண்டு கதையினை விளங்கிக் கொள்கின்றனர். தமக்கு விளங்கியபடி மற்றவர்களுடன் பகிர்ந்தும் கொள்கின்றனர்.

கந்தலோயா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கதைசொல்லல், உலகசினிமாவுக்கு பரீட்சயப்படல் போன்றன தனியான நிகழ்வுகளாக இடம்பெறாத போதிலும், பாடசாலைக் கல்வியுடன் இணைந்து பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அவர்களின் ஆசிரியர்களாலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால் அதிக நேரத்தினை பாடசாலையில் செலவிடும் இம் மாணவர்கள் தமது பாடசாலைக் கற்றல் செயற்பாட்டில் ஆர்வமாய் ஈடுபடுகின்றனர். அதேயளவு ஈடுபாட்டுடன் ஆக்க செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். ஏனைய பாடசாலைகள் போன்றில்லாமல் ஆசிரிய வளம், பொருளாதாரவளம் என்பன மிக மிக குறைவானதும், அடிப்படை வசதிகளற்றதுமான இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆரம்பத்தில் மனச்சுமைகளுடன் அமைதியாய் இருந்தனர். வாய்ப்பும், கூட நடத்தலும் அவர்களின் மனங்களை திறக்கச் செய்ததோடு அவர்கள் சுமைகளை எழுத்தில் வெளிப்படுத்தவும் தூண்டியுள்ளது. கல்வி, விளையாட்டு, ஆக்கசெயற்பாடுகள் என யாவற்றிலும் ஆர்வமாய் ஈடுபடும் இம்மாணவர்களின் மனவெளிப்பாடுகளையும் தன்னுள் பதித்துக்கொண்டுள்ளது "சின்னஞ்சிறிய பூக்கள் 3".

சின்னஞ்சிறிய பூக்கள். 3

பிள்ளைகளின் உலகங்களை ஒன்று சேர்த்து அவற்றை உங்களுடனும் பகிர்ந்து கொள்ளும் விருப்பின் வெளிப்பாடாய் "சின்னஞ்சிறிய பூக்கள். 3" இனை நூலுருவாக்கியுள்ளோம். பிள்ளைகளின் ஆக்கங்களை கவிதை, கட்டுரை, குறுங்கதைகள், படங்கள், விமர்சனங்கள், புகைப்படங்கள், அனுபவப்பகிர்வு, எனத் தொகுத்துள்ளோம். தமது ஆக்கங்கள் மூலம் அவர்கள் உங்களுடன் மட்டும் பேசவில்லை, தாம் யாருக்கு என்ன சொல்ல விரும்புகிறார்களோ அதனையும் எழுத்தாக்கியுள்ளார்கள்.

இத்தொகுப்பின் ஆக்கங்களை ஒப்பிடுதல், பொதுமைப்படுத்துதலை விடவும் அவ்வவ் சமூக பின்னணியில் வைத்து உணர்தலும் வாசித்தலுமே அப்பிள்ளைகளின் தனித்துவத்தையும் அவர்களின் உலகத்தையும் அறியவும் உதவும். உங்கள் கருத்துகளை எங்களுக்கும் அறிய தாருங்கள் அவற்றைப் பிள்ளைகளிடம் கொண்டு சேர்க்கின்றோம்.

கனத்த மனத்தினராய்
கலந்துகொண்டு
கதைகேட்டு
மனம் நெகிழ்ந்து
உடல் தளந்து
தம் உள்ளத்தில்
எழுந்த உணர்வுகளை
எழுத்துருவாக்க
எடுத்த முயற்சியின்
பதிவை உங்களுடனும்
பகிர்ந்து மகிழ்கின்றோம்.

உதவி.நண்பர்கள்

September 2013

## சமர்ப்பணம்

செல்லக் கதைகள் பேசி

வண்ணக்கனவுகளுடன்

சிட்டுக்களாய் சிறகடிக்கையில்

வன்மமாய் வாழ்வு பறிக்கப்பட்டு

வாடி உதிர்ந்துபோன

உலக சிறுவர்களுக்கு

உதவி. uthawi.

www.uthawi.net